இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 82 - ஒலி : 181 - திருவள்ளுவர் ஆண்டு 2055 - தை 28 - ஞாயிற்றுக்கிழமை 11 பிப்ரவரி 2024 - மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 181: Thiruvalluvar Year - 2055 - Thai 28 - Sunday 11 February 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## மெட்ரோ ரயில் 2-ஆம் கட்டத் திட்டப் பணிகளை நிறைவேற்றிட

# ஒன்றிய அரசு விரைவில் ஒப்புதல் வழங்குக!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!



**சென்னை, பிப். 11-**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பாகவும், ஒப்புதல் அளிக்கும் நடைமுறையை விரைவுபடுத்திட வேண்டுமென்று கோரியும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், முதல்வர் அவர்கள், ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில், 50:50 என்ற சமபங்கு வீதத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதற்கட்டப் பணிகள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன என்றும், இதனடிப்படையில், 63,246 கோடி ரூபாய் செலவில், 119 கிலோ மீட்டர் நீளமுள்ள மேலும் மூன்று வழித்தடங்களைக் கொண்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு (MoHUA) பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### ஒன்றிய அரசின் ஒப்புதலை மாநில அரசு ஆவலுடன் எதிர்பார்க்கிறது!

ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றின் பரிந்துரையுடன், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி ஒப்புதல்களும் இறுதி செய்யப்பட்டு அனுப்பப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதற்குப் பிறகு, ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள், 21.11.2020 அன்று சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய பட்ஜெட்டில் இத்திட்டத்திற்கான எதிர் நிதியுதவிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரும், 17.8.2021 அன்று பொது முதலீட்டு வாரியத்தால் (PIB) பங்கு பகிர்வு மாதிரியின் கீழ் மத்திய துறை திட்டமாகப் பரிந்துரைக்கப்பட்ட நிலையிலும், ஒன்றிய அரசின் ஒப்புதலை தமிழ்நாடு அரசு ஆவலுடன் எதிர்பார்த்ததாக தனது கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இந்தியப் பிரதமர் அவர்களுடனான பல்வேறு சந்திப்புகளின்போது இதுதொடர்பாக தான் வலியுறுத்தி வந்த போதிலும், இதில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், இந்தத் திட்டத்திற்கான முன்மொழிவு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் காத்திருப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் கவலையோடு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### மாநில அரசுக்கு கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது!

ஒன்றிய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக, இரண்டாம் கட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள தாகவும், பொருளாதார விவகாரங்களுக் கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல் இல்லாத நிலையில், ஒன்றிய அரசின் பங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், மாநில நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொண்டு வருவதாகவும், இது பணிகளின் வேகத்தைக் குறைத்துள்ளதோடு, மாநில அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும், அப்போதுதான் சென்னை மக்களின் இந்த கனவுத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்த முடியும் என்றும் தனது கடிதத்தில் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.



**இந்தியப் பிரதமர் அவர்களுடனான பல்வேறு சந்திப்புகளின்போது இது தொடர்பாக தாம் வலியுறுத்தி வந்தபோதிலும், இதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், இந்தத் திட்டத்திற்கான முன்மொழிவு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் காத்திருப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் கவலையோடு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

### விரைந்து நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்திடுவீர்!

எனவே, முதல் கட்டப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது போல, 50:50 என்ற சமபங்கு வீதத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசின் கூட்டு முயற்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு, விரைவுபடுத்திட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## மக்களவையில் தமிழ்நாட்டு

# மீனவர் பிரச்சினை குறித்து விவாதிக்க மறுப்பு!

### கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் கூட்டணிக் கட்சியினர் வெளிநடப்பு!

புதுடெல்லி, பிப். 11 -

தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினை குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் மக்களவையில் இருந்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

மக்களவை நேற்று கூடியதுமே, அலுவல்களை ஒத்தி வைத்து விட்டு, தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டும் என நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் டி.ஆர். பாலு வலியுறுத்தினார்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவித்திடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளதையும், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளதையும் டி.ஆர்.பாலு சுட்டிக் காட்டினார்.

ஆனால் ராமர் கோயில் பிரச்சினை குறித்து மட்டுமே விவாதிக்க முடியும் என்று சபாநாயகர் மறுப்பு தெரிவித்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் உறுப்பினர்கள், தமிழ்நாட்டு மீனவர்களை பாதுகாப்போம் என முழக்கங்களை எழுப்பி வெளிநடப்பு செய்தனர்.

---

## திருச்சியில் ஆளுநருக்கு எதிராக மார்க்சிஸ்ட் ஆர்ப்பாட்டம்!

திருச்சி, பிப். 11 –

திருச்சிக்கு வந்த ஆளுநருக்கு எதிராக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக, பல்வேறு அரசியல் கட்சியினரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திருச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, திருவானைக்காவலுக்கு வருகை தந்த ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கருப்புக்கொடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

---

## 2022, 2023-ஆம் ஆண்டு

# தேர்தல்களில் பா.ஜ.க. ரூ.1092 கோடி செலவு!

### தலைமைத் தேர்தல் ஆணையத்தில் வெட்ட வெளிச்சமாகியுள்ளது!

*புதுடெல்லி, பிப். 11 -*

*கடந்த 2022-2023ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் பா.ஜ.க. ஆயிரத்து 92 கோடி ரூபாய் செலவு செய்திருப்பது, அக்கட்சியின் வரவு செலவு கணக்கு அறிக்கை மூலம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.*

*தலைமைத் தேர்தல் ஆணையத்தில் பா.ஜ.க. தனது வரவு செலவு கணக்கு அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.*

*அதில் அக்கட்சி, 2022-2023ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 360 கோடி ரூபாய் வரவு வந்துள்ளதாக கூறியுள்ளது. அந்த தொகையில் 2,120 கோடி ரூபாய் தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்துள்ளது என்றும், 237 கோடி ரூபாய் வங்கிகளில் டெபாசிட்டுகளுக்கு கிடைத்த வட்டித்தொகை என்றும் பா.ஜ.க. தெரிவித்துள்ளது. அத்துடன் 2022 - 2023ம் ஆண்டில் தேர்தல்களுக்கு ஆயிரத்து 92 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாகவும், கட்சி சார்பில் அளிக்கப்பட்ட விளம்பரங்களுக்கு 432 கோடி ரூபாய் செலவிட்டு இருப்பதாகவும் பா.ஜ.க. குறிப்பிட்டுள்ளது.*

*பழைய செய்தித்தாள்களை விற்றது மூலம் மட்டும் 15 புள்ளி 59 லட்சம் ரூபாய் கிடைத்ததாகவும், அதே நேரத்தில் புதிய செய்தித் தாள்கள் வாங்குவதற்கு 43.89 லட்சம் ரூபாய் செலவிட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் பா.ஜ.க. கூறியுள்ளது.*

*வரவு செலவு அறிக்கையில் 2022 - 2023ம் ஆண்டில் தங்களுக்கு கிடைத்த தொகை என பா.ஜ.க. குறிப்பிட்டுள்ள தொகையானது, கடந்த 2021 - 2022ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 443 கோடி ரூபாய் அதிகமாகும்.*

*தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜ.க.வுக்கு கிடைத்த தொகையும், பிற எதிர்க் கட்சிகளுடன் ஒப்பிடுகையில் 7 மடங்கு அதிகமாகும்.*

*இதேபோல் வங்கிகளில் செய்யப்பட்டுள்ள டெபாசிட் மூலம் கிடைத்த வட்டியும் இரு மடங்கு அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.*

### விவசாயப் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று

# மேட்டூர் அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறப்பு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, பிப்.11-

நடப்பு ஆண்டில் வடகிழக்குப் பருவமழை பொழிவு குறைவாக பெய்த காரணத்தாலும், காவிரி நதி நீர் பற்றாக்குறையாலும், டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்ட சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடக்கோரி விவசாய பெருமக்களிடமிருந்து முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை கிடைக்கப் பெற்றதன் அடிப்படையில் விவசாயப் பெருமக்களின் நலன் கருதி நெற்பயிரினைக் காத்திட மேட்டூர் அணையிலிருந்து 2 TMC தண்ணீரை 03.02.2024 முதல் திறந்து விட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்திரவிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து 03.02.2024 அன்று 6,000 கனஅடியும் 04.02.2024 முதல் 09.02.2024 வரை நாளொன்றுக்கு 5,000 கன அடி வீதமும் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது மேட்டூர் அணையிலிருந்து திறக்கப் பட்ட தண்ணீர் போதுமான அளவு காவிரி டெல்டா பகுதியில் உள்ள பாசன நிலங்களுக்கு கடைமடை வரை செல்வதற்கு ஏதுவாக கால நீட்டிப்பு செய்யுமாறு விவசாய பெருமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயப் பெருமக்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப் பட்டு, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயப் பெருமக்களின் நலன் கருதி பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிரினைக் காத்திட மேட்டூர் அணையிலிருந்து ஒரு நாள் கூடுதலாக அதாவது 10.02.2024 வரை தண்ணீர் திறக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயப் பெருமக்கள் இப்பாசன நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி சம்பா நெற்பயிரைப் பாதுகாத்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



நேற்று (10.02.2024) தலைமைச் செயலகத்தில் நீர்வளத் துறை அமைச்சர் . துரைமுருகன் தலைமையில் நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, நீர்வள, நிலவள திட்ட இயக்குநர் தென்காசி சு. ஜவகர், நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் திருமதி சு. மலர்விழி, நீர்வளத்துறை அரசு சிறப்பு செயலாளர் கா.முருகன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் .அ. முத்தையா, காவேரி தொழில் நுட்ப குழுமத்தின் தலைவர் ஆர்.சுப்ரமணியன், மற்றும் தலைமைப் பொறியாளர்கள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இரத்த சோகை நோய் பாதிப்புக்கு உள்ளான பெண்கள்;

### தடைப்பட்ட வளர்ச்சிக்கு ஆளான குழந்தைகள் எண்ணிக்கையில்

# உலகளவில் இந்தியா முதலிடமா? அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தி.மு.க. நாடாளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி, பிப்.11-

குன்றிய மற்றும் தடைப்பட்ட வளர்ச்சிக்கு உள்ளான குழந்தைகளின் உலகளாவிய எண்ணிக்கையில் இந்தியக் குழந்தைகள் நான்கில் ஒரு பங்கு அளவில் இருப்பது உண்மைதானா? அது போல, இரத்த சோகை நோய் பாதிக்கப்பட்டுள்ள மகப்பேறுக்கு தகுதியான வயதில் உள்ள இந்தியப் பெண்களின் எண்ணிக்கையும் உலகளவிலான எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு உள்ளதும் உண்மை தானா? இதற்கு ஒன்றிய அரசின் எதிர் வினை என்ன ? உண்மை நிலைமை அப்படித்தான் என்றால், இத்தகைய கடும் பாதிப்புக்கு உள்ளான இந்தியப் பெண்களையும் குழந்தைகளையும் நோயிலிருந்து மீட்டெடுக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக, ஊட்டச்சத்து குறைபாடு களை தீர்க்க அரசின் உணவு சார் கொள்கைகள் வெற்றியைத் தராததைக் கருத்தில் கொண்டு மாற்று செயல் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா? அப்படி என்றால், அவற்றின் விவரங்கள் என்னென்ன? என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, அவர்கள் மக்களவையில் நேற்று முன்தினம் (9.2.2023) வினா எழுப்பினார்.

இவ்வினாவுக்கு, ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் திருமதி சுமிர்தி ஈரானி சுமிர்தி ஈரானியின் பதில் பின்வருமாறு :-

“இந்த கடுமையான பிரச்சினைக்கு தீர்வு காணவும், ஊட்டச்சத்து மேம்பாடு தொடர்பாக அரசு பல்வேறு முயற்சிகளை உயர் முன்னுரிமை அளித்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

15 ஆம் நிதிக் குழு அறிக்கையில் இந்த இரு பிரச்சினைகள் தொடர்பான அம்சங்கள் பலவற்றையும் கருத்தில் கொண்டு சீரமைக்கப்பட்ட இரண்டு சிறப்புத் திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 6 வயதுகுட்பட்ட குழந்தைகள், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், மேலும் 14 முதல் 18 வயது வரையுள்ள வளர்பருவ இளம் மகளிர் ஆகியோர் ஊட்டச்சத்துணவு பெற்றிட உதவி, அதற்கேற்ப அங்கன்வாடி மையங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை இவ்விரு திட்டங்களின் நோக்கம் என்றும் இவை மாநில அரசுகள், ஒன்றியப் பகுதி நிர்வாகங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். 13.97 இலட்சம் அங்கன்வாடி மையங்களில் ஆண்டிற்கு 300 நாட்கள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கூடுதல் ஊட்டச் சத்துணவு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நோய் பாதிப்பு நிலையில் முன்னேற்றம் இல்லை - தேசிய ஆய்வு முடிவுகள்

ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் , பெண்கள் ரத்த சோகை தாக்கம் குறித்து 2019-21 காலகட்டத்தில் நடத்திய ஆய்வுகளின்படி, 15 முதல் 49 வயதுக்குட்பட்ட மகப்பேறுக்கு தகுதியான பெண்களில் 57 விழுக்காடு பெண்கள் ரத்த சோகையால் பீடிக்கப்பட்டு உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. தேசிய குடும்பநல ஆய்வு-5, தனது அறிக்கையில் இந்த தகவலைத் தெரிவித்துள்ளது.

அதைப்போல, 6 வயதுக்குட்பட்ட 7 கோடியே 44 லட்சம் குழந்தைகளிடம் 2023-டிசம்பரில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 36 விழுக்காடு அளவிற்கு குன்றிய மற்றும் தடைபட்ட வளர்ச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதும் தெரிய வந்துள்ளது. மேலும், 17 விழுக்காடு அளவிற்கு எடைக் குறைவு மற்றும் 6 விழுக்காடு அளவிற்கு பயனற்ற (வேஸ்ட்) நிலையில் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.” என ஒன்றிய அமைச்சர் திருமதி சுமிர்தி ஈரானி எழுத்துப் பூர்வமான பதிலில் மக்களவையில் தெரிவித்தார்.

# நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மோடி நிறைவேற்றவில்லை!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப்.11-

ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள வெள்ளை அறிக்கை மீதான விவாதம் மாநிலங்களவையில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்று பேசிய காங்கிரஸ் உறுப்பினர் கே.சி. வேணுகோபால், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள வெள்ளை அறிக்கையில் பண முடக்கம் குறித்த தகவல் எதுவும் இடம் பெறாதது ஏன் என்று வினவினார். பண முடக்கத்தால் சிறு, குறு தொழில்துறை முடங்கியதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

பாரத ரத்னா விருதை அரசியலுக்காக பா.ஜ.க. பயன்படுத்துவதாக அவர் விமர்சித்தார். கருப்பு பணம் மீட்பு, ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு, விவசாயிகள் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்ற எந்தவொரு வாக்குறுதியையும் பிரதமர் மோடி நிறைவேற்றவில்லை என்றும் கே.சி. வேணுகோபால் குற்றஞ் சாட்டினார்.

### ரூ. 8.16 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூரில்

# நெகிழுரும்பு குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,பிப். 11-

ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் தொகுதி, பெரும்பாக்கம் வடக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிக்கு பிரத்யேக நெகிழுரும்பு குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டது என சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் தொகுதி, பெரும்பாக்கம் வடக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிக்கு பிரத்யேக நெகிழுரும்பு குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகளுக்கு 05.02.2024 அன்று அமைச்சர் பெருமக்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், 400 மி.மீ விட்டமுடைய பிரத்யேக குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் 3.4 கி.மீ நீளத்திற்கு பழைய மாமல்லபுரம் சாலையிலிருந்து பெரும்பாக்கம் வடக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வரை 06.02.2024 அன்று தொடங்கப்பட்டது.




இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களை – மீன்பிடிப் படகுகளை விடுவித்திட நடவடிக்கை எடுத்து

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பித்திடுக!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, பிப்.11–

**இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவித்திடவும், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு, பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி விரைவான, தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (9.2.2024) கடிதம் எழுதியுள்ளார்.

**மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு!**

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் கைது மற்றும் மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதையும், இதனால் பல தலைமுறைகளாக இந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதையும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கோவிட்19 பெருந்தொற்று காலத்தைத் தவிர்த்து, கடந்த சில ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளதை குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பாரம்பரியமாக தமிழ்நாடு மீனவர்கள் பயன்படுத்தி வரும் மீன்பிடிப் பகுதிகள் இலங்கைக் கடற்படையினரால் கட்டுப்படுத்தப்படுவதையும், இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பெருமளவில் பாதித்துள்ளதோடு, மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ள அவர் களின் கலாச்சார மற்றும் சமூகக் கட்டமைப்பிற்கு பெருத்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். 2023 ஆம் ஆண்டில், இலங்கைக் கடற்படையினர் 243 மீனவர்களை கைது செய்துள்ளதுடன், 37 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கடந்த 28 நாட்களில் மட்டும், 6 சம்பவங்களில், 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 12 மீன்பிடிப் படகுகள் சிறை பிடிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

**மீனவர்களின் பொருளாதாரம் பாதிப்பு!**

இப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையில், மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாடு மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்படும் தாக்குதல்கள், மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படுத்தும் சேதங்கள் கவலையை மேலும் அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இது போன்ற செயல்கள் மீனவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், மீனவர்களுக்கு பொருளாதார பாதிப்புகளை மேலும் அதிகரித்துள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை நாட்டுடைமையாக்கிட இலங்கை அரசாங்கத்திற்கு அதிகாரமளிக்கும் வகையில், 2018 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் கடல்சார் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பாக, முன்னரே தான் எழுதியிருந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்ததை குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்கள், இலங்கை அரசின் இந்த நடவடிக்கையால், நல்ல நிலையில் உள்ள, பறிமுதல் செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்டு, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர முடியவில்லை என வேதனையோடு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பல மீனவர்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பைக் கொண்டு, தங்களது வர்த்தகத்திற்கு இன்றியமையாத படகுகளை வாங்குவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் முதலீடு செய்துள்ளதையும், முறையான இழப்பீடு அல்லது மாற்று ஏற்பாடுகள் ஏதுமில்லாமல், படகுகள் இதுபோன்று நாட்டுடைமையாக்கப்படுவது, மீனவர்களையும், அவர்களது குடும்பங்களையும் நிதி நெருக்கடியில் தள்ளியுள்ளதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவித்திடுக!**

எனவே, பறிமுதல் செய்யப்பட்டு நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள இந்திய மீன்பிடிப் படகுகளைத் திரும்பப் பெற்றிடவும், படகுகளை உடனடியாக விடுவித்திடவும் ஏதுவாக, மேற்படி சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை உறுதி செய்திடவும், மீனவ சமூகங்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை களைப் பாதுகாத்திடவும் உரிய தூதரக வழி களைப் பின்பற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கூட்டு நடவடிக்கைகளின் மூலம் இது சாத்தியமாகும் என்பதால், இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பிக்க, விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கையை எடுக்குமாறும் தனது கடிதத்தில் இந்தியப் பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை வசம் தற்போதுள்ள 77 மீனவர்கள் மற்றும் அவர்களது 151 படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான அனைத்து தூதரக முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 03.01.2024 அன்று பாகிஸ்தான் அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களையும், 05.12.2023 அன்று குவைத் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு தமிழ்நாட்டு மீனவர்களையும் விடுவித்திடவும், உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

தமிழ்நாட்டில் கடும் மழை, வெள்ளச் சேதம்!

# நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது ஏன்?

## மக்களவையில் ஆ.ராசா கேள்வி!

புதுடெல்லி, பிப். 11-

“தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடும் வெள்ளச் சேதங்களுக்கு நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது ஏன்?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழகக் கொறடா ஆ.ராசா மற்றும் அ.கணேசமூர்த்தி ஆகியோர் கேள்வி எழுப்பினார்.



அ. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், சென்னை, அதன் புறநகர்ப் பகுதிகள் மற்றும் தென் தமிழகப் பகுதிகளில் மிக பலத்த மழைப் பொழிவாலும் வெள்ளத்தாலும் பல இழப்புகளும் நஷ்டங்களும் இயற்கைப் பேரிடரால் ஏற்பட்டன. அதைப் பற்றி ஆய்வு செய்து இழப்பின் தன்மையைக் கணிக்க ஒன்றிய அரசு மத்தியக் குழு எதையேனும் அனுப்பியுள்ளதா?

ஆ. ஆம் எனில். அது பற்றிய விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

இ. தமிழ்நாட்டின் எட்டு மாவட்டங்களில் இயற்கைப் பேரிடர்களால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, நிவாரணப் பணிகளுக்காக நிதிஉதவி கோரி தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்திருந்ததா?

ஈ. ஆம் எனில், மாநிலம் கோரிய மொத்த நிதி உதவித் தொகை எவ்வளவு? பேரிடர் நிவாரணத் தொகையாக இதுவரை தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

உ. பொதுச் சொத்துகள் கடுமையான சேதத்திற்கு இரையாகியுள்ளன. நிவாரணப் பணிகள் விரைவில் நடைபெறவேண்டும். மொத்த நிதித் தொகையும், உதவிகளும், ஒன்றிய அரசின் ஒத்துழைப்பும் தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு ஏற்ப வழங்கப்பட எவ்வளவு கால அவகாசம் ஆகும்?

இதற்கு உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்த மாநில அமைச்சர் நித்யானந்த் ராய் அளித்த பதில் வருமாறு:-

நாட்டில் நிகழும் இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் சேதங்களை ஆய்வு செய்து, நிவாரணப் பணிகளைத் தக்கபடி மேற்கொள்ள, தேசிய மற்றும் மாநில அளவில் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்க குறிப்பிட்ட வழி முறைகள் உள்ளன. பேரிடர் நிவாரணத்திற்கான தேசிய கோட்பாட்டின்படி, நிவாரணப் பணிகளுக்கான முக்கியப் பொறுப்பு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கே உள்ளதாகும். ஒன்றிய அரசு இயன்றவரை அனைத்து வகைகளிலும் மாநில அரசுகளின் முயற்சிகளுக்கு துணை நிற்கும். நிதி உதவி, நிவாரணப் பொருட்கள் உரிய இடங்களைச் சென்றடைவது போன்றவற்றுக்கு ஒன்றிய அரசு உதவிபுரியும். நிலைமையைச் சீர்படுத்த ஒன்றிய அரசு இயன்றவரை அனைத்து உதவிகளையும் செய்யும்.

புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் சேதங்களைக் கணக்கிட்டு நிதிஉதவிகள் மக்களுக்கு வழங்கவேண்டியது மாநில அரசுகளின் கடமை. இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டியது மாநில அரசுகளின் பொறுப்பு. இதற்கென மாநில அரசுகளுக்கு ஏற்கெனவே மாநிலப் பேரிடர் நிவாரண நிதி என்ற பெயரில் (State Disaster Response Fund) (SDRF மாநில அரசுகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அதிக உதவித் தொகை தேசியப் பேரிடர் நிவாரண உதவி என்ற திட்டத்தின் கீழ் (National Disaster Response Rund NDRF) விதிமுறைகளின் படி நீட்டிக்கப்படும். அவற்றுள் ஒன்று Inter Ministerial Central Team (IMCT) எனும் பிரத்யேகக் குழுவின் ஆய்வு அவசியம் என்பது. இந்த மய்யக் குழு சேதங்களை நேரிடையாகப் பார்வையிட்டு அறிக்கை அளிக்கும். அதன் அடிப்படையில் உபரியான நிதி உதவி பரிசீலிக்கப்படும். SDRF/NDRF அமைப்புகள் மூலம் அளிக்கப்படும் நிதி உதவியும் நிவாரணங் களுக்காகவேயொழிய, ஏற்பட்ட நஷ்டங்கள், இழப்புகள் அனைத்திற்கும் ஈடான தொகை அல்ல.

பாதிக்கப்பட்டுள்ள மாநில மக்களுக்கு உதவும் விதமாக தமிழ்நாடு அரசுக்கு SDRF திட்டத்தின் கீழ், 2023-24 நிதி ஆண்டுக்கென ரூபாய் 1200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பங்காக 900 கோடி ரூபாயும் மாநிலப் பங்காக 300 கோடி ரூபாயும் என்ற கணக்கில்).

முதல் தவணையாக ரூபாய் 450 கோடி ஒன்றிய அரசின் பங்காக 10.07.2023 நாளன்று வழங்கப்பட்டு விட்டது. இதைத் தவிர, MICHAUNG புயல் தாக்கிய போது, SDRF திட்டத்தின் கீழ், இரண்டாவது தவணையாக ரூபாய் 450 கோடி மாநில அரசுக்கு 12.12.2023 நாளன்று முன்னதாகவே வழங்கப்பட்டது. இது புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கான நிவாரண உதவியாகும்.

மேலும், தனது SDRF கணக்கில் ரூபாய் 813.15 கோடி துவக்க இருப்பாக (Opening Balance) இருப்பதாக தமிழ்நாடு அரசே அறிவித்துள்ளது. இது 2023 ஏப்ரல் 1 ஆம் நாள் நிலவரப்படியானது. மொத்தத்தில், நிவாரணப் பணிகளுக்கென மாநில அரசின் SDRF கணக்கில் உள்ள தொகை ரூபாய் 2013.15 கோடியாகும். (1200+813.15).

2023, டிசம்பர் 3 மற்றும் 4ஆம் நாள் தாக்கிய MICHAUNG புயலாலும் பலத்த மழையாலும் தமிழ்நாட்டின் வடமாவட்டங்கள் நான்கு பாதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2023, டிசம்பர் 17, 18ஆம் நாளன்று பொழிந்த கனத்த மழையால் தமிழ்நாட்டின் நான்கு தென் மாவட்டங்களில் வெள்ளத்தாலும் நீர்த் தேக்கங்களாலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. குறிப்பிட்ட இரு பேரிடர்கள் நிகழ்ந்த போதும், தமிழ்நாடு அரசின் கோரிக்கை மனு கிடைக்கும் முன்பே ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் (MHA) (Ministry of Home Affairs) IMCT எனும் குழுவை அமைத்துவிட்டது. (Inter Ministrial Central Team IMCT).

இந்தக் குழுவினர் MICHAUNG புயலால் சேதமடைந்த பகுதிகளை, 2023 டிசம்பர் 11ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நேரிடையாகப் பார்வையிட்டனர். மேலும், வெள்ளத்தாலும் கனத்த மழையாலும் பாதிக்கப்பட்ட தென் தமிழ்நாட்டுப் பகுதிகளுக்கு நேரில் சென்று டிசம்பர் 11 முதல் 22 வரை சேதங்களைப் பார்வையிட்டனர். இதற்கென உள்துறை அமைச்சகம் (MHA) இன்னொரு IMCT குழுவை பிரத்யேகமாக அமைத்து அனுப்பி வைத்தது.

தமிழ்நாடு அரசு உபரியாக நிதி உதவி கோரி இரண்டு மனுக்களை அனுப்பியுள்ளது. புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் சார்ந்த நிவாரணப் பணிகளுக்காக ஒன்று. மழையாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதங்கள் சார்ந்த நிவாரணப் பணிகளுக்காக நிதிஉதவி கோரி மற்றொன்று. இரண்டு கோரிக்கை மனுக்களும் கிடைத்தபின் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டன.

2024 ஜனவரி 11 முதல் 14 வரை மீண்டும் IMCT குழுவினர் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களுக்கு நேரிடையாகச் சென்று சேதங்களை மதிப்பிட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட இடங்கள் அனைத்திற்கும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

IMCT குழுவினரின் அறிக்கை வந்ததும் மேலும் அதிக நிவாரணத் தொகை வழங்குதல் குறித்த முடிவு கோட்பாடுகள் மற்றும் விதி முறைகளின்படி எடுக்கப்படும். NDRF (National Disaster Response Fund) திட்டத்தின்கீழ் உபரியான உதவித் தொகை வழங்குவது பரிசீலிக்கப்பட்டு தக்க முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் நித்யானந்த்ராய் பதிலளித்துள்ளார்.



வேலூர் மாவட்டம் காட்பாடியில் நடந்த ‘மக்களுடன் முதல்வர்’ நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# சிவகங்கை மாவட்டத்தில் - பேரறிஞர் அண்ணா நினைவுநாள் நிகழ்ச்சி!

## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - திருமதி தமிழரசி பங்கேற்பு!

சிவகங்கை, பிப். 11-

சிவகங்கை மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் 55வது ஆண்டு நினைவுநாள் அனுசரிக்கப்பட்டது. மாவட்டம்; முழுவதும் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

திருப்பத்தூர் காந்தி சிலையிலிருந்து கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட செயலாளருமான கே ஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைதி பேரணி துவங்கி மதுரை சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு அமைச்சர் கே ஆர் .பெரியகருப்பன்மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவரை தொடர்ந்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேலு, விராமதி மாணிக்கம், பேருர் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலரணி நாராயணன், மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், ஒன்றிய பேருர் நிர்வாகிகள் காளிமுத்து, ஷாஜகான், பொருளாளர் ஏ . எம் . கண்ணன் , திருநாவுக்கரசு, தொ.மு.ச., முத்தலிபு, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், கார்த்தி,பூக்கடைபாண்டியன், இளைஞரணி பஷிர், உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடியில் அண்ணா சிலைக்கு நகர் கழக செயலாளர் என்.குணசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி. பாலா, காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்து துரை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி. சன் சுப்பையா, சொ.கண்ணன், சேவியர், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமலதா செந்தில் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை நீதிமன்ற வாயில் முன்பாக உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், நகர் மன்ற துணை தலைவர் கார்கண்ணன், ஒன்றிய நகர நிர்வாகிகள் முரசொலி மதி, சோமசுந்தரம், ஜெயகாந்தன், இளைஞரணி ஹரிகரன், கண்மணி, முத்துமணி, வீரகாளை, வீனஸ்ராமநாதன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுஅமைப்பாளர் சிங்கமுத்து, மகளிரணி திலகவதி கண்ணன், மஞ்சுளா மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

---

# தமிழக மீனவர்கள் மீதான

## இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தை

## வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

## தலைமைக் கழக அறிவிப்பு

**கடந்த பத்தாண்டுகளில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் 3076 தமிழ்நாடு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் 534 படகுகள் கடத்தப்பட்டுள்ளன. இலங்கைக் கடற்படையின் அட்டூழியங்கள் குறித்தும் மீனவர் நலன் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாண்புமிகு பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய அமைச்சர்களிடம் வலியுறுத்தியுள்ளதோடு, மாண்புமிகு பிரதமருக்கு 9 கடிதங்களும், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு 35 கடிதங்களும் எழுதியுள்ளார். ஆனாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சனையை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு கையாண்டு வருகிறது; இலங்கை அரசின் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.**

**தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (11.02.2024 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் இராமேஸ்வரத்தில், கழக மீனவரணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஒருங்கிணைப்பில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறுகிறது.**

**ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்கும்படி நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இராமநாதபுரம், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மீனவர் சங்கங்களை அந்தந்த கழக மாவட்டச் செயலாளர்கள் திரட்டி ஆர்ப்பாட்டத்தை பெரும் வெற்றியடையச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி பகுதி, அல் அமீன் நகர், வார்டு 8, பரையாத்திக்குளம் கண்மாய் கரையில் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைத்து நடை பாதை அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மாமன்ற உறுப்பினர்கள் ராதிகா, கௌரிசங்கர், செங்கிஸ்கான் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் ஒரியண்டல் அமிருன்நிஷா உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பள்ளிவாசல் மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினர். உடன் திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராசப்பா உட்பட பலர் உள்ளனர்.

### தேசிய கல்விக் கொள்கையைப் பின்பற்றி

# செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 11 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையில் 05 பிப்ரவரி 2024 அன்று தேசிய கல்விக் கொள்கையை பின்பற்றும் போது மாணவர்கிடையே, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும், திறன் மேம்பாட்டிற்கும், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முயற்சிகளை பெருக்கவும், நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யவும் மாணவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் சுபாஷ் சர்க்கார் அவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர்அவர்கள் அளித்த



பதில் வருமாறு:

மாணவர்களிடையே, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி, திறன் மேம்பாட்டை பெருக்கவும், ஆராய்ச்சியையும் புத்தாக்க முயற்சிகளை மேம்படுத்தவும், தேவையான வகையில் தேசிய கல்விக் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் மாறிவரும் கல்வி திட்டங்களில் மாணவர்களுக்கு தேவையான கல்வி மேம்பாட்டிற்கும், நீடித்த வளர்ச்சிக்கும் செயற்கை நுண்ணறிவு பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும்,

கணிதம் கணிணித் துறை அறிவியல் போன்ற பாடங்களின் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் உதவி செய்கிறது என்றும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்பிற்கும், கல்வி சார்ந்த வன்பொருள் மற்றும் மென் பொருள் வளர்ச்சியிலும், மாற்று திறனாளிகளின் பயிற்சிக்கும், பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களை சரி செய்தல், உயிரி தொழில் நுட்பத்துறை நீடித்தகால வளர்ச்சி இலக்குகளை அடைதல் ஆகிய துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர், டாக்டர் சுபாஷ் சர்க்கார், மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஜே.ஜெகன் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### மோடி அரசு வெளியிட்டது வெள்ளை அறிக்கை அல்ல;

# பொய்களின் திரட்டு - வெள்ளை இருட்டு!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, பிப். 11-

மோடி அரசு வெளியிட்டது வெள்ளையறிக்கையல்ல; பொய்களின் திரட்டு - வெள்ளை இருட்டு என 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

அது வருமாறு:-



தீக்கதிர்
2024 பிப்ரவரி 10 சனிக்கிழமை
பொய்களின் திரட்டு
மாநிலங்களவையில் பதவிக்காலம் முடிந்த சில உறுப்பினர்கள் வியாழனன்று விடைபெற்றனர். அந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, கடந்த 10 ஆண்டு கால பாஜக ஆட்சியில் நடைபெற்ற பொருளாதார சீரழிவு குறித்து காங்கிரஸ் கட்சி வெளியிட்ட கறுப்பு அறிக்கையை சுட்டிக் காட்டினார். அருமையாக நடந்து கொண்டிருக்கும் ஆட்சியின் மீது பொல்லாதவர்களின் கண் பட்டுவிட்டதாம். இதற்காக திருஷ்டி (காலா தீக்கா) கழிக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாராம். அந்த கறுப்புத் தாளை அவைக்கு கொண்டு வந்ததன் மூலம் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அந்த வேலையை செய்து முடித்து விட்டாராம்.

மாநிலங்களவையில் பதவிக்காலம் முடிந்த சில உறுப்பினர்கள் வியாழனன்று விடைபெற்றனர். அந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, கடந்த 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் நடை பெற்ற பொருளாதார சீரழிவு குறித்து காங்கிரஸ் கட்சி வெளியிட்ட கறுப்பு அறிக்கையை சுட்டிக் காட்டினார். அருமையாக நடந்து கொண்டிருக்கும் ஆட்சியின் மீது பொல்லாதவர்களின் கண் பட்டுவிட்டதாம். இதற்காக திருஷ்டி (காலா தீக்கா) கழிக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தாராம். அந்த கறுப்புத் தாளை அவைக்கு கொண்டு வந்த தன் மூலம் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அந்த வேலையை செய்து முடித்து விட்டாராம்.

தங்களின் சாதனைகளைப் பற்றி பேச வக்கற்ற மோடி நாடாளுமன்றத்தில் பேசும் போது கடந்த 10 ஆண்டுகளில் வாக்குறுதிகளை நிறை வேற்ற என்ன செய்தோம் என்பதை ஒரு போதும் பேசியதில்லை. நேரு ஆட்சியில் துவங்கி இந்திரா காந்தி ஆட்சிவரை திட்டித் தீர்ப்பதே அவரது வழக்கமாகிவிட்டது.

இதைத்தான் நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலும் செய்தார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் வெள்ளையறிக்கை என்ற பெயரில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை சொல்லியே நேரத்தைப் போக்கினார். கடந்த கால ஆட்சியாளர்கள் பொருளாதாரத்தை சீரழித்துவிட்டார்கள் என்றால் அதை சீரமைக்கத் தானே உங்களை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்று கேட்டால், காங்கிரஸ் செய்த தவறுகளை கடந்த 10 ஆண்டுகளாக சரிசெய்து கொண்டிருக்கிறார்களாம். இன்னும் அந்த வேலை முடியவில்லையாம். கூடுதலாக 5 ஆண்டுகள் தேவைப்படுவதால் மீண்டும் எங்களை தேர்ந்தெடுங்கள் என்று மக்களிடம் கேட்கிறார்கள். 10 ஆண்டு காலம் செய்யாதவர்கள் இனி மேலா செய்யப் போகிறார்கள்?

இவர்களது பத்தாண்டு கால ஆட்சியில் "இந்தியாவின் ஜி.டி.பி. வளர்ச்சி 5 விழுக்காடாக சரிந்து விட்டது. அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து பணவீக்கம் 10 விழுக்காடாக அதிகரித்துள்ளது. மாநிலங்களுக்கு வழங்கவேண்டிய நியாயமான நிதிப்பகிர்வை வழங்காமல் மாநில அரசுகளை ஒன்றிய அரசிடம் கையேந்தும் நிலைக்கு கொண்டு வந்து விட்டனர். மோடி ஆட்சியில் தான் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்துள்ளது.

பணமதிப்பிழப்பு மற்றும் குறை பாடுள்ள ஜி.எஸ்.டி. போன்றவற்றால் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் நெருக்கடியில் இருந்து மீள முடியாமல் தவிக்கின்றன.

கோடிக்கணக்கான விவசாயிகள் விவசாயத்தை இழந்து விவசாய கூலித் தொழிலாளியாக மாறிவிட்டனர். விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவதாக வாக்குறுதி அளித்த மோடி அரசு அதை நிறைவேற்றவில்லை. இதுதான் இவர்கள் செய்த சாதனை. இவற்றையெல்லாம் மோடி அரசின் வெள்ளையறிக்கை திட்டமிட்டு மறைத்து விட்டது. எனவே அது வெள்ளையறிக்கை அல்ல; பொய்களின் திரட்டு. வெள்ளை இருட்டு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், 20வது வார்டைச் சேர்ந்த ஏ.ஷேக் மன்சூர், 24வது வார்டைச் சேர்ந்த அ.ரவீந்தர், 7வது வார்டைச் சேர்ந்த ஆர்.மணி ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஶ்ரீதர், தலைமையில் நேற்று முன்தினம் (09.02.2024) பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிணந்தோடு பகுதியில் அரசு துணை சுகாதார நிலையத்தினை திறந்து வைத்தார்கள்.

### மாசு தடுப்பு - கட்டுப்பாடு திருத்த மசோதா

# மாநில உரிமைகளைப் பறிக்கும் கொடூரச் சட்டம்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் பேச்சு!

புதுடெல்லி, பிப்.11-

ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்த மசோதா மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் கொடூர மசோதாவாகும் என்று வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மக்களவையில் டி.எம். கதிர் ஆனந்த் பேசியது வருமாறு:-

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்த மசோதா, 2024, மீதான விவாதத்தில் பேச அனுமதி அளித்தமைக்கு நன்றி. இந்த மசோதா பல விதிமீறல்களை குற்றமற்றதாக்குகிறது, அதற்கு பதிலாக அபராதங்களை விதிக்கிறது. இது ஆரம்பத்தில் இமாச்சல பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தும். மற்ற மாநிலங்கள் அதன் பயன்பாட்டை நீட்டிக்க தீர்மானங்களை நிறைவேற்றலாம். இது மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதாக அமைந்துள்ள ஒரு கொடூரமான சட்டமாகும்.

ஒன்றிய அரசு, மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்துடன் கலந்தாலோசித்து, ஒப்புதலைப் பெறுவதிலிருந்து சில வகை தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளிக்கலாம் என்று மசோதா குறிப்பிடுகிறது. இது மாநில உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும், கூட்டாட்சி அமைப்பின் மீதான நேரடித் தாக்குதலாகும். இந்த சட்டத்தின்படி, கழிவுநீரை நீர்நிலை, கழிவுநீர் கால்வாய் அல்லது நிலத்தில் வெளியேற்றும் சாத்தியம் உள்ள எந்தவொரு தொழிற்சாலை அல்லது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் முன் அனுமதி தேவைப்படுகிறது. எந்த ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு முன் அதனால் நீர், காற்று, நிலம் ஆகியவற்றில் ஏற்படும் மாசு நிலைமையைக் குறித்தும் அத்தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்து அதன் பிறகே மாநில மாசுகட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்கும். ஆனால் தற்போது இந்த மசோதாவில் இதற்கு விலக்கு அளிப்பதாக கூறுவது கொடூரமான சட்டத்துக்கு வழிவகுக்கும்.

ஒருவேளை மத்திய மாசுக் கட்டுப்பாடு விலக்களித்து தொடங்கப்பட்ட தொழிற்சாலையில் நீர் மாசுபடுதல் காரணமாக ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பு ஏற்பது. பாதிக்கப்பட்ட பொது மக்கள் மாநில அரசிடம் தான் முறையிடுவார்கள். உள்ளாட்சி அமைப்புகளிடம் தான் முறையிடுவார்கள். ஒன்றிய அரசு அமைதியாக இருந்து பிரச்சனையிலிருந்து நழுவிவிடுவார்கள். ஆகவே இந்த மசோதா சட்டமாவதன் மூலம் ஒன்றிய அரசு மாநில மாசுகட்டுப்பாடு அதிகாரங்களை மீறி தங்களுக்கு வேண்டிய தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க முடியும். இது ஒரு மோசமான செயலாகும். மேலும் இந்த மசோதா மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்கிய அனுமதியை எவ்வித காரணமுமின்றி ரத்து செய்ய வழிவகுக்கிறது. இது என்ன மாதிரியான மனநிலை. இந்த நாடு எதை நோக்கிச் செல்கிறது. ஒன்றிய அரசு பெரியண்ணன் மாதிரி நடப்பது மிகவும் மோசமான செயலாகும்.



1974 மூலச் சட்டத்தின் கீழ், மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் மாநில அரசால் நியமிக்கப் படுகிறார். தலைவரின் நியமனம், சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒன்றிய அரசு பரிந்துரைக்கும் என்று மசோதா மேலும் கூறுகிறது. இதுவும் அப்பட்டமான அரசியல் சட்ட மீறலாகும். இதன் பொருள் ஒன்றிய அரசு மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களை கையகப்படுத்த விரும்புகிறது மற்றும் அனைத்து அதிகாரங்களும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் இருக்க விரும்புகிறது. பிறகு பல்கலைக்கழக துணை வேந்தர்களை ஆளுநர் மூலம் நியமிப்பீர். அடுத்து யாரவது வந்து இவரை இப்படித்தான் நியமிக்க முடியும் என்பார். மாநில மாசுக்கட்டுப்பாடு தலைவர் பதவியை நியமிக்கும் உரிமையைக் கூட ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ள நினைப்பது நேர்மையற்றது. மாநிலங்களின் கூட்டாட்சித் தத்துவத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளை நசுக்கும் செயலாகும்.

தற்போது இந்த சட்ட திருத்தத்தின் மூலம் மத்திய அரசு இந்த மசோதா மூலம் சிறைத் தண்டனையை நீக்குவதுடன், அதற்கு பதிலாக, ரூ.10,000 முதல் ரூ.15 லட்சம் வரை அபராதம் விதிக்கிறது. இது நடந்தால், சட்டத்தை மீறுபவர்கள் அபராதம் செலுத்துவதன் மூலம் எளிதில் தப்பிக்க முடியும், எந்த பயமும் இருக்காது, சிறைத் தண்டனை மட்டுமே நிரந்தரத் தடையாக அமையும். இந்த மசோதா அந்த ஷரத்துகளை நீர்த்துப்போகச் செய்வது துரதிர்ஷ்டவசமானது.

மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் முன் அனுமதி இல்லாமலே மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி மட்டுமே பெற்று தொழிற்சாலை அமைக்கலாம் என்பது மாநில உரிமைகளில் குறுக்கீடு செய்யும் செயலாகும். யாருடைய நலனுக்காக ஒன்றிய அரசு இப்போது திடீரென இந்த கொடூரமான மசோதாவைக் கொண்டு வர விரும்புகிறது, அசல் சட்டத்தில் வழங்கப் பட்ட மாநில மாசுக்கட்டுப் பாட்டு வாரியங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறுகிறது, அதிகாரம் செலுத்துகிறது.

இந்த சட்டத்தின் கீழ் அபராதங்களை தீர்மானிக்க தீர்ப்பளிக்கும் அதிகாரிகளை நியமிக்க இந்த மசோதா ஒன்றிய அரசை அனுமதிக்கிறது. அதிகாரி ஒன்றிய அரசின் இணைச் செயலாளர் அல்லது மாநில அரசின் செயலாளர் அந்தஸ்தில் இருக்க வேண்டும். தீர்ப்பு அலுவலர்களை நியமிப்பதில் மாநில அரசின் பங்கு என்ன? மத்திய அரசின் பெரிய அண்ணன் அணுகுமுறை தேவையற்றது. இது கூட்டாட்சி முறைக்கு எதிரானது. தீர்ப்பளிக்கும் அதிகாரியால் விதிக்கப்படும் அபராதங்கள் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன் கீழ் நிறுவப்பட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிதியில் வரவு வைக்கப்படும். அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் என்று கருதப்பட்ட தண்டனைகளை ஒன்றிய அரசு பறிக்கும் மற்றொரு தந்திரமாகும். மாசுபடுத்தும் தொழிற்சாலைகளால் மோசமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு இழப்பீட்டையும் வழங்க மாநில அரசுகளே சிறந்த நிலையில் உள்ளன.

இந்த சட்டத்தின்படி, மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அல்லது மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அல்லது வாரியங்களுக்கு புகார் குறித்து நோட்டீஸ் கொடுத்த நபர் புகார் அளித்தால், நீதிமன்றம் ஒரு குற்றத்தை கவனத்தில் கொள்ளலாம். தீர்ப்பளிக்கும் அதிகாரியால் புகார் அளிக்கப்பட்டால் மட்டுமே கவனத்தில் கொள்ளலாம் என்றும் மசோதா கூறுவது அபாயகரமானதாகும்.

சட்டத்தின் எந்தவொரு விதிமுறையையும் மீறினால், ஒரு துறையின் தலைவர் அவர்களின் அடிப்படை சம்பளத்தின் ஒரு மாதத்திற்கு சமமான அபராதத்தை செலுத்த வேண்டும் என்று இம்மசோதா குறிப்பிடுகிறது. அதாவது, ஒரு மாத அடிப்படை சம்பளத்தை வழங்குவதன் மூலம் துறைத் தலைவரை விடுவிக்க முடியும். ஆனால் இதன் மூலச் சட்டத்தின் கீழ், அரசுத் துறைகளால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக துறையின் தலைவர் குற்றவாளியாகக் கருதப்படுவார், அத்தகைய மீறலைத் தவிர்ப்பதற்காக உரிய விடாமுயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். தற்போது அந்த நிர்பந்தம் இல்லை என்பதால் குற்றம் அதிகரிக்க வாய்ப்பு அதிகம்.

இந்திய அரசியலமைபுச் சட்டத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நாட்டின் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது. உள்ளூர் மற்றும் கிராம அளவிலும், அரசியலமைப்பின் கீழ் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மசோதா மூலம் மாநில அரசின் உரிமைகள் பறிக்கப்படும். எனவே இந்த மசோதா அரசியலமைப்புச் சட்டத்துக்கு புறம்பானது.

பல்வேறு மசோதாக்கள் மூலம் மாநிலங்களின் உரிமைகளை மீறும் செயலை ஒன்றிய அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

ஜி.எஸ்.டி. வரி அறிமுகமானது மாநில அரசுகளின், குறிப்பாக தமிழ்நாடு போன்ற உற்பத்தி மாநிலங்களின் நிதி சுதந்திரத்தின் மீதான தாக்குதலாகும்.

NEET சட்டம் வாயிலாக மாநிலங்களின் தன்னாட்சி மருத்துவக் கொள்கை முற்றிலும் பாதிக்கப்படுகிறது மருத்துவ படிப்புக்கான இடங்களை நிரப்பும் மாநில உரிமையை NEET சட்டம் மூலம் ஒன்றிய அரசு பறித்துக் கொண்டது. 3. அணை பாதுகாப்பு மசோதா, 2019 அதன் மாநிலத்திலும், அண்டை மாநிலங்களிலும் அமைந்துள்ள அணைகளின் மீதான மாநில அரசுகளின் உரிமைகளைப் பறித்துள்ளது. 4. தேசியக் கல்விக் கொள்கை என்பது மாநிலக் கல்விக் கொள்கையின் மீதான மையத்தின் தாக்குதலாகும்.

குடியுரிமை திருத்த மசோதா, 2019 ஒரு கொடூரமான மசோதா. மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட 3 வேளாண் சட்டங்கள் விவசாயிகளால் பெரும் போராட்டங்களை உருவாக்கி இறுதியாக வாபஸ் பெறப்பட்டது. பல மாநில கூட்டுறவு சங்கங்கள் திருத்த மசோதா, 2022. குற்றவியல் நடைமுறை (அடையாளம்) விதிகள், 2022 அட்டைகளில் உள்ளது. மின்சாரத் திருத்த மசோதா 2022 இன்னும் நிலுவையில் உள்ளது.

தில்லி முனிசிபல் கார்ப்பரேஷன் திருத்த மசோதா, 2022. இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் திருத்த மசோதா, 2020. தேசிய மருத்துவ ஆணைய மசோதா, 2019. 13. முக்கிய துறைமுக அதிகாரிகள் மசோதா, 2020. 14. மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) மசோதா, 2019. இந்திய அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் உரிமைகளை பறித்து, கூட்டுறவு கூட்டாட்சி அமைப்பின் கொள்கைகளுக்கு எதிரான பல மசோதாக்களை இதுபோல் என்னால் பட்டியலிட முடியும். இப்படி மாநில அரசுகளின் தன்னாட்சி நசுக்கப்பட்டால் அந்நிய நேரடி முதலீடுகளைக் கவர இயலாது. மாநிலங்களை நிரவாகம் செய்வது கடினமான பணியாகும். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாநிலத்துக்கு அந்நிய நேரடி முதலீடுகளைக் கவர அனுதினமும் பல்வேறு வகையில் பணியாற்றி பல நாடுகளுக்கு சென்று அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்க பாடுபட்டு வருகிறார். அவர் மாதிரியே அனைத்து மாநில முதல்வர்களும் அமைச்சர்களும் அவரவர் மாநிலங்களுக்கு அந்நிய நேரடி முதலீடுகளைப் பெற கடினமாக உழைக்கின்றனர், ஆனால் இந்த மசோதாவில் கூறியுள்ளது போல் மாநில அரசின் மாசு கட்டுப்பாடு வாரியத்தை மத்திய மாசுக் கட்டுபாடு வாரியம் அத்துமீறி வஞ்சிக்கும் போது அந்நிய முதலீடுகள் செய்வோருக்கு நம்பிக்கை வராது. அம்மாநிலத்தில் முதலீடுகள் செய்வதற்கு தயங்குவர். எனவே இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலம், நமது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள மாநிலங்கள் மற்றும் பொது மக்களின் உரிமைகளைப் பறிக்க ஒன்றிய அரசு நினைக்கிறது.

இன்று நீங்கள் ஆட்சி அதிகாரத்தில் உள்ளீர். மாநில அரசுக்களுடன் பெரிய அண்ணன் மனப்பாங்குடன் நடந்து கொள்ளலாம். நீங்கள் பலம் மிக்கவர்களாக இருக்கிறீர்கள் என்று இறுமாப்பு கொள்ள வேண்டாம். இதே நிலை தொடருமானால் அடுத்த தேர்தலில் நீங்கள் பல மாநிலங்களில் தோற்கடிக்கப் படுவீர்கள். இன்று நாங்கள் எதிர்கட்சி வரிசையில் இருக்கிறோம். நீங்கள் ஆளுங்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளீர்கள். நாளை நீங்கள் எதிர் வரிசையில் இங்கே வருவீர்கள். நாங்கள் ஆளும் கட்சி வரிசையில் அமர்வோம். அப்போது நீங்கள் போட்ட சட்டங்களே உங்களுக்கு எதிராக வரும். இந்த உரையை நிறைவு செய்வதற்கு முன் ஒன்றிய அரசுக்கு தமிழில் நான்கு வரிகளைக் கூற விரும்புகிறேன். ஏய்ப்பவர்க்கே காலம் என்று எண்ணி விடாதே!... பொய் எத்தனை நாள் கை கொடுக்கும் மறந்து விடாதே... ஒரு நாள் இந்த நிலைமைக்கெல்லாம் மாறுதல் உண்டு... அந்த மாறுதலை செய்வதற்கு தேர்தல் உண்டு.

இவ்வாறு அவர் பேசினார்.


நாள் : 11.02.2024
ஞாயிற்றுக்கிழமை
ARASU ARTS
கோயமுத்தூர் - திருப்பூர் மாநகராட்சி பகுதிகளுக்கும்,
கோயமுத்தூர் - திருப்பூர் மாவட்ட, ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கும்
குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மற்றும்
கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும்,
அரசு நலத்திட்ட உதவிகள் வழுங்க வருகை தரும்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களை
கொங்கு மண்டலத்துக்கு வருக. வெல்க என வெற்றி முழக்கத்துடன் வரவேற்கும்
கே.என்.நேரு
நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்


கலைஞர் 100
1924 - 2023
ரூ.1191 கோடி மதிப்பீட்டில்
திருப்பூர் மாநகராட்சி பகுதிகளுக்கு புதிய குடிநீர் திட்டம் மற்றும்
திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரக குடியிருப்புகளுக்கான
கூட்டுக் குடிநீர் திட்டம் தொடக்க விழா மற்றும்
அரசு நலத்திட்ட உதவி வழங்க வருகை தரும்
இளைஞர்களின் எழுச்சி நாயகன்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!
மு.பெ.சாமிநாதன் BA.,
தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
கயல்விழி செல்வராஜ்
தி.மு.கழக மகளிர் அணி துணைச் செயலாளர்
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
இல.பத்மநாபன்
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர்
தலைவர், 4வது மண்டலம் - திருப்பூர் மாநகராட்சி




மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்**

**கழகத் தலைவர்** அவர்களின் நல்லாட்சியில்

# ரூ.779.86 கோடி மதிப்பீட்டில்

**பில்லூர் மூன்றாம் குடிநீர் திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைப்பதற்காக**
**கோவைக்கு வருகை தரும் திராவிட பேரியக்கத்தின்**

# இளைய தலைவரே!

**வருக... வருக...**

**நாள் : 11-02.2024 | நேரம் : காலை 11.00 மணி | இடம் : சரவணம்பட்டி, துடியலூர் சாலை.**

மாண்புமிகு அமைச்சர்

**சு.முத்துசாமி** அவர்கள்,

வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை

**நா.கார்த்திக்,** Ex.MLA.,
கோவை மாநகர் மாவட்டச் செயலாளர்

**தளபதி முருகேசன்,**
கோவை தெற்கு மாவட்டச் செயலாளர்

**தொ.அ.ரவி,**
கோவை வடக்கு மாவட்டச் செயலாளர்

# ஒருங்கிணைந்த கோவை மாவட்ட திமுக


நாள் : 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை
இடம் : சரவணம்பட்டி, கோவை.
- பில்லூர்–III கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகளை தொடங்கி வைக்கவும்,
- புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிடவும்,
- பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும்,
கோவை மாவட்டத்திற்கு வருகைதரும்
கழக இளைஞர் அணி செயலாளர்,
தமிழ்நாடு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
கழக முதன்மைச் செயலாளர், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு
கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர்
திரு. ஆ.ராசா M.P., ஆகியோரையும்
வருக. வருக.. என அன்புடன் வரவேற்கும்...
திரு. சு.முத்துசாமி அவர்கள்
மாண்புமிகு வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்
திரு. வி.செந்தில்பாலாஜி அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர்
திரு. வி.சி.ஆறுக்குட்டி Ex. MLA., அவர்கள்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் - கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி
திரு. இரா.ராஜீவ்காந்தி அவர்கள்
தலைவர் - கழக மாணவர் அணி
தொண்டமுத்தூர் அ.ரவி
மாவட்ட செயலாளர் - கோவை வடக்கு மாவட்ட தி.மு.க.
அசோக்பாபு ஆறுக்குட்டி B.Tech.,
மாவட்ட துணைச் செயலாளர் - கோவை வடக்கு மாவட்ட தி.மு.க.


கலைஞர் 100 1924 - 2023
புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை தொடங்கி வைக்கவும்,
புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிடவும், அரசு நலத்திட்ட
உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட
உதவிகளை வழங்கிடவும் கோவைக்கு வருகைதரும்
கழக இளைஞர் அணி செயலாளர்,
மாண்புமிகு. தமிழ்நாடு இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாடு (ம) சிறப்பு திட்டங்கள்
செயலாக்கத்துறை அமைச்சர்
இளம் தலைவர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கிறோம்...
மாண்புமிகு. K.N.நேரு
கழக முதன்மைச் செயலாளர்
நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
உயர்திரு. ஆ.இராசா MP,
கழக துணைப் பொதுச் செயலாளர்
மாண்புமிகு. சு.முத்துசாமி
வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு
மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
மாண்புமிகு. V.செந்தில்பாலாஜி
தமிழ்நாடு அமைச்சர்,
கரூர் மாவட்ட கழக செயலாளர்
தொ.அ.ரவி
கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
கே.இ.பிரகாஷ்
மாநில துணைச்செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி
இரா.ராஜீவ்காந்தி
தி.மு.க. மாணவர் அணித் தலைவர்,
கவுண்டம்பாளையம் தொகுதி பொறுப்பாளர்
எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம்
கோவை வடக்கு மாவட்ட
இளைஞர் அணி அமைப்பாளர்
ஆ.அசோக்பாபு
கோவை வடக்கு மாவட்ட
துணைச் செயலாளர்
கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் : விக்னேஷ், சூரியன் தம்பி, அருணாச்சலம், நாகராஜ், உதயநிதி பாபு
மனோஜ் முத்துசாமி B.A., மாவட்ட துணை அமைப்பாளர்
கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி



நாள் : 11.02.2024
ஞாயிற்றுக்கிழமை

ரூ.1191 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளுக்கு
புதிய குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்து
திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த
165 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை
தொடங்கி வைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

மாண்புமிகு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களே

**வருக! வருக!! வருக!!!**

மாண்புமிகு. **மு.பெ.சாமிநாதன்**
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

மாண்புமிகு. **என்.கயல்விழி செல்வராஜ்**
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

திரு. **கு.சண்முகசுந்தரம்**
பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. **இல.பத்மநாபன்**
திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர்

திரு. **இரா.ஜெயராமகிருஷ்ணன்** Ex.MLA
திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அவைத்தலைவர்

**திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.**


நாள் : 11.02.2024
ஞாயிற்றுக்கிழமை
ரூ.1191 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளுக்கு
புதிய குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்து
திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த
165 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை
தொடங்கி வைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்,
கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர்
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்களையும்,
வருக! வருக!! வருக!!! என வரவேற்கிறேன்
க.செல்வராஜ் MLA.,
திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர்
திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க.

# மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் ஒன்றிய அரசு போடும் கடிவாளம்!

**14**ஆவது நிதிக் குழுவின் காலமான 2015-16 இன் துவக்கத்திலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்கிடும் நிதியின் அளவை ஒன்றிய அரசு குறைத்து வருகிறது. ஒன்றிய அரசின் வரி வருவாயில் 42 சதவீதத்தை மாநிலங்களுக்கு ஒதுக்கிட 14ஆவது நிதிக் குழு பரிந்துரைத்தது. இது 13ஆவது நிதிக் குழுவின் பரிந்துரையை விட 10 சதவீத புள்ளிகள் அதிகமாக இருந்தபோதும், அரசு மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கை விசித்திரமானதாகும். ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசமாக மறு வரையறை செய்யப்பட்ட பின் அவற்றிற்கான நிதி ஒதுக் கீட்டை தவிர்த்துவிட்டு 41 சதவீதம் என்ற பரிந்துரையையே 15ஆவது நிதிக் குழுவும் அளித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கையின் மூலம் ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கிடும் நிதியை குறைத்ததோடு மட்டுமின்றி, ஒன்றிய அரசின் விருப்பத்தின்படியான செலவுகளை அதிகரிக்கச் செய்திட தனது சொந்த மொத்த வருமானத்தை உயர்த்திக் கொண்டுள்ளது. ஒன்றிய அரசின் விருப்பப்படியான செலவுகள், மாநில அரசுகளின் பட்ஜெட்டின் மூலம் செயல்படுத்தப்படுவதில்லை. எனவே, இவை வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு தாக்கத்தை ஏற்படுத்தும்.

### வரி வருமானம் பற்றிய சில அடிப்படை கணக்கீடு

ஒன்றிய அரசின் நிகர வரி வருமானத்தில் மாநிலங்களின் பங்கின் அளவை நிதிக் குழு பரிந்துரைக்கிறது. மொத்த வரி வருவாய் மற்றும் நிகர வரி வருவாய் ஆகியவற்றின் இடையேயான வேறுபாட்டில் வரியை வசூலிப்பதற்கு ஆகும் செலவுகள், யூனியன் பிரதேசங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய வரி வருமானம் மற்றும் செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் (சர்சார்ஜ்) ஆகியன அடங்கும். 14ஆவது மற்றும் 15ஆவது நிதிக் குழுக்கள் நிகர வரி வருவாயிலிருந்து முறையே 42 மற்றும் 41 சதவீத நிதி ஒதுக்கீட்டை பரிந்துரைத்தபோதும், மொத்த வரி வருவாயில் 2015-16இல் இது 35 சதவீதமாகவும், 2023-24இல் (பட்ஜெட் மதிப்பீடு) 30 சதவீதமாகவும் மட்டுமே இருந்தது.

2015-16இல் 14.6 லட்சம் கோடி ரூபாய்களாக இருந்த ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாய், 2023-24இல் 33.6 லட்சம் கோடி ரூபாய்களாக அதிகரித்தபோதும், ஒன்றிய அரசின் வரி வருவாயில் மாநிலங்களின் பங்கு என்பது மேற்கூறப்பட்ட ஆண்டுகளுக்கிடையே 5.1லட்சம்கோடிரூபாய்களிலிருந்து 10.2 லட்சம் கோடி ரூபாய்களாக மட்டுமே அதிகரித்துள்ளது. இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஒன்றிய அரசின் வருவாய் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளபோதும், அதில் மாநிலங்களின் பங்கு என்பது இரண்டு மடங்கு மட்டுமே அதிகரித்துள்ளது.

### மானியக் குறைப்பு - ஜி.எஸ்.டி.

மாநிலங்களுக்கான மானியங்கள் என்பதும் நிதிக் குழுவால் பரிந்துரைக்கப்படும் மற்றொரு சட்டப்பூர்வமான நிதியளிப்பாகும். மானியங்களாக மாநில அரசுகளுக்கு அளிக்கப்படும் நிதியின் முழுமையான தொகையும் 2015-16இல் இருந்த 1.95 லட்சம் கோடி ரூபாய்கள் என்பதிலிருந்து 2023-24இல் 1.65 லட்சம் கோடி ரூபாய்க ளாகக் குறைந்துள்ளது. இவ்வாறாக, ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு சட்டப்பூர்வமாக ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த தொகையின் அளவு 48.2 சதவீதம் என்பதிலிருந்து 35.32 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் வாயிலாக வசூலிக்கப்படும் வருவாய், யூனியன் பிரதேசங்களிலிருந்து வசூலிக்கப்படும் வருவாய் மற்றும் வரி நிர் வகிப்பு தொடர்பான செலவினங்கள் ஆகியவற்றை கழித்துவிட்டு, அரசின் நிகர வரி வருவாய் கணக்கிடப் படுகிறது. இக்காலகட்டத்தில் ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் மாநிலங்களின் பங்கு வீழ்ச்சியடைந்த தற்கு இத்தகைய கணக்கீடு ஒரு காரணமாகும். மொத்த வரி வருவாயிலிருந்து கழிக்கப்படும் மேற்கூறப்பட்ட மூன்று காரணிகளில், செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் மூலமாக ஈட்டப்படும் வருவாய் அதிகமானதாகும்.

மேலும், இந்த வருவாய் அதிகரித்தும் வருகிறது. 2015-16இல் செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் மூலமான வருவாய் (85,638 கோடி ரூபாய்) என்பது ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 5.9 சதவீதமாக இருந்தது. 2023-24இல் இத்தகைய வருவாய் 3.63 லட்சம் கோடி ரூபாய்களாக அதிகரித்து மொத்த வரி வருவாயில் 10.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

ஜுன்-2022-லிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் சரக்கு மற்றும் சேவை வரி அமலாக்கம் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்ட வசூலிக்கப்படும் ஜி.எஸ்.டி. செஸ் தொகையை இக்கணக்கீடு தவிர்த்துள்ளது. குறிப்பிட்ட துறைகளில் தனது சொந்த திட்டங்களை செயல்படுத்துவதற்காக செஸ் மற்றும் கூடுதல் கட்டணம் ஆகிய பிரிவுகளின் கீழ் வரி வசூலை ஒன்றிய அரசு அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில், இவ்வாறு திரட்டப்படும் வருவாயை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை.



ஜெ.ஜெயரஞ்சன்
தமிழ்நாடு திட்டக்குழு
துணைத்தலைவர்



ஆர்.சீனிவாசன்
தமிழ்நாடு திட்டக்குழு
உறுப்பினர்

### பெருமளவில் மையப்படுத்தப்படும் பொதுச் செலவினங்கள்

வரி வருவாயில் பகிர்வு அல்லது மானியங்கள் என்ற வகையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவு குறையும்போது அல்லது ஒன்றிய அரசின் மொத்த வருவாயின் அதிகரிப்பு விகிதத்திற்கு ஏற்ப ஒதுக்கப்படும் நிதியின் அளவு அதிகரிக்காதபோது, ஒன்றிய அரசு தனது விருப்பப்படி செலவிடுவதற்கு பெரியதொரு நிதி கிடைக்கிறது. மாநிலங்களுக்கிடையேயான நிதி ஆதாரங்களின் பங்கீட்டில் சமத்துவத்தை இது பாதிக்கலாம். மத்திய நிதி யுதவி திட்டங்கள் (சி.எஸ்.எஸ்.) மற்றும் மத்திய துறை திட்டங்கள் போன்ற இரண்டு வழிமுறைகளின் மூலம் ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு நேரடி நிதி பரிமாற்றத்தை செய்திடலாம்.

மத்திய நிதியுதவி திட்டங்களுக்கான ஒரு பகுதி நிதியை ஒன்றிய அரசும் மீதியை மாநில அரசும் அளிக்க வேண்டும் என்பதால் மாநிலங்களின் முன்னு ரிமைகள் மீது ஒன்றிய அரசு தனது செல்வாக்கினை செலுத்துகிறது. ஆக, ஒன்றிய அரசு முன்மொழிகிற திட்டங்களை, தங்களது நிதியாதாரங்களை ஈடுபடுத்தி மாநில அரசுகள் செயல்படுத்துகின்றன. 2015-16 மற்றும் 2023-24க்கு இடைப்பட்ட காலத்தில், 59 மத்திய நிதி யுதவி திட்டங்களின் மூலம் இவற்றுக்கான நிதி ஒதுக்கீடு 2.04 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 4.76 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இவ்வாறாக, ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதிக்கு கிட்டத்தட்ட இணையானதொரு நிதியை மாநில அரசு ஒதுக்கிட நிர்ப்பந்திக்கப்படுகிறது.

மேலும், மத்திய நிதியுதவி திட்டங்களின் கீழ் 2023-24இல் மாநிலங்களுக்கு 3.64 லட்சம் கோடி ரூபாய்கள் மட்டுமே உண்மையில் பரிமாற்றம் செய்யப் பட்டு, கிட்டத்தட்ட 1.12 லட்சம் கோடி ரூபாய்கள் இதர செலவுகளுக்காக ஒன்றிய அரசால் வைத்துக் கொள்ளப்பட்டது.

### இரண்டு வித பாதிப்பு...

மத்திய நிதியுதவி திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் தொகைக்கு இணையான தொகையை தனது பட்ஜெட்டிலிருந்து ஒதுக்கும் நிலையில் உள்ள மாநிலங்கள் மட்டுமே, அத்தொகையை மானியமாக ஒன்றிய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள இயலும் என்பது இத்திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். இது பொது நிதியை அளிப்பதில் மாநிலங்களுக்கிடையேயான சமத்துவத்தில் இரண்டு விதமாக பாதிப்பை ஏற்படுத்துகிறது. நிதிவசதி கொண்ட மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அளிக்கும் நிதிக்கு இணையான நிதியை அளிக்கும் திறன் இருக்கும். மேலும், மத்திய நிதியுதவி திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அம்மாநிலங்களால் ஒன்றிய அரசின் நிதியை தங்களது மாநிலத்திற்கு பெற இயலும்.

நிதி வசதி இல்லாத மாநிலங்கள் தாங்கள் கடனாகப் பெறும் நிதியைக் கொண்டு இத்திட்டங்களுக்கான தங்களது பங்கு நிதியை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் இத்தகைய மாநிலங்களின் கடன் சுமை அதிகரிக்கிறது. மாநிலங்களின் பொது நிதிகளின் இத்தகைய வேறுபட்ட வழிமுறைகள், பொது நிதியில் மாநிலங்களுக்கிடையே சமத்துவமின்மையை வலியுறுத்துகின்றன. மத்திய நிதியுதவி திட்டங்கள் இதற்கு முக்கியக் காரண மாக இருக்கின்றன.

மத்திய துறை திட்டங்கள் என்பன பிரத்யேகமான சட்டப்பூர்வமான அல்லது நிறுவனக் கட்டுப்பாடுகளை ஒன்றிய அரசு கொண்டுள்ள துறைகளில் ஒன்றிய அரசால் முழு நிதியும் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. 700க்கும் மேற்பட்ட மத்திய துறை திட்டங்களை செயல்படுத்த 2015-16இல் ஒன்றிய

அரசால் ஒதுக்கப்பட்ட 5.21 லட்சம் கோடி ரூபாய்கள் 2023-24ல் 14.68 லட்சம் கோடி ரூபாய்களாக அதிகரித்துள்ளது. இதன் மூலம், மத்திய துறை திட்டங்களுக்கு பெரும் பங்கு நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்வது தெளிவாகிறது.

இத்தகைய திட்டங்களின் மூலம் குறிப்பிட்ட மாநிலங்கள் அல்லது தொகுதிகளை பலனடையச் செய்யும் நோக்கத்துடன் ஒன்றிய அரசு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யலாம். இத்திட்டங்கள் ஒன்றிய அரசால் நேரடியாகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் என்பதால், 60.942 கோடி ரூபாய்கள் மட்டுமே 2023-24இல் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 2023-24இல் மத்திய நிதியுதவி திட்டங்கள் மற்றும் மத்திய துறை திட்டங்கள் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து 19.4 லட்சம் கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. இதில், 4.25 லட்சம் கோடி ரூபாய்கள் மட்டுமே மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

### கூட்டாட்சிக்கு எதிரான நிதிக் கொள்கைகளுக்கான வாய்ப்பு

மத்திய நிதியுதவித் திட்டம் மற்றும் மத்திய துறை திட்டங்கள் மூலம் செய்யப்படும் பணப் பரிமாற்றங்கள் சட்டரீதியான பரிமாற்றங்கள் அல்ல. ஏனெனில், இவை சட்டரீதியான அம்சங்களின் அடிப்படையிலோ அல்லது நிதிக் குழுதீர்மானித்தகணக்கீட்டின்படியோஇல்லை. இத்தகைய சட்டரீதியான பரிமாற்றமாக இல்லாத நிதி பங்கீடு என்பது ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 12.6 சதவீதமாக உள்ளது. 2023-24இல் சட்டரீதியான நிதி ஒதுக்கீடுகளையும் சேர்த்து மாநிலங்களுக்கு மொத்தமாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி என்பது ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் வெறும் 47.9 சதவீதமாகவே இருந்தது.

மேலும், சட்டரீதியான பரிமாற்றமாக இல்லாத நிதி ஒதுக்கீடு என்பது கட்டுப்பாடுகளைக் கொண்டதாகும். அதாவது, எந்த திட்டத்திற்காக அந்த நிதி ஒதுக்கப்பட்டதோ அந்த குறிப்பிட்ட திட்டத்திற்கு மட்டுமே அதனை செலவிட வேண்டும். பொதுச் செலவினங்களை மாநில அரசுகள்மேற்கொள்வதில்அதன்சுதந்திரத்தை இது வெட்டிச் சுருக்குகிறது. மொத்த வரி வருவாயில் 50 சத வீதத்திற்கும் கூடுத லான தொகையை தக்க வைத்துக் கொள்வதோடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.9 சத வீதம் என்ற அளவுக்கு நிதிப் பற்றாக்குறையை ஒன்றிய அரசு ஏற்படுத்துகிறது. இவ்வாறாக, வரையறுக்கப்பட்ட செலவினப் பொறுப்புகளோடு மிகப் பெரிய அளவிலான நிதி அதிகாரங்களை ஒன்றிய அரசு பயன்படுத்துகிறது.

மேலும், ஒன்றிய அரசின் வரி வருவாயில் மாநிலங்களின் பங்கை 42 சதவீதத்திலிருந்து குறைக்க வேண்டும் என ஒன்றிய அரசு வாதிட்டதாகவும், அதை 41 சதவீதமாக நிதிக் குழு தக்க வைத்ததாகவும் 15ஆவது நிதிக் குழு குறிப்பிட்டது. அதிக செலவின பொறுப்புகளை மேற்கோள் காட்டி, 16ஆவது நிதிக் குழுவின் முன்பும் இதே வாதத்தை ஒன்றிய அரசு வைத்திடலாம்.

**நன்றி: தீக்கதிர்**
**09.02.2024**

---

மாநிலங்களை வழிநடத்த நமக்கு சுதந்திரம் வேண்டும்!

# ஜம்முவுக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும்!

## மக்களவையில் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!

*புதுடெல்லி, பிப்.11-*

“ஜம்முவுக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மக்களவையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

இது குறித்து மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி பேசியதாவது:-

ஜம்மு - காஷ்மீர் உள்ளாட்சி சட்ட திருத்த மசோதா மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறுகின்றேன். அனேகமாக நமது நாட்டில் மட்டும் தான் மக்கள் பிறப்பி லிருந்து பல நூற்றாண்டுகளாக பாகுபாடு காட்டப்பட்டது என்றுதான் நினைக்கிறேன். இங்குதான் இன அடிப்படையில் பாகுபாடு காட்டப்பட்டது. இந்த நாட்டில் தீண்டாமை என்ற கொடிய குற்றம் நடைமுறையில் இருந்தது. அந்த தீண்டாமைக்கு எதிரான சட்டம் கொண்டுவர பல பெரிய தலைவர்கள் பாடு பட்டனர்.

பாபா சாகேப் அம்பேத்கர் தீண்டாமை ஒழிப்பு சட்டத்தை கொண்டு வந்தார். ஆனால் இந்த சட்டம் இருந்தபோதிலும் நடைமுறையில் தீண்டாமை கொடுமை இன்னமும் உள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியாவின் பல பகுதிகளில் தீண்டாமை இன்னும் நடைமுறையில் உள்ளது. இட ஒதுக்கீட்டின் மூலம் அந்த மக்களுக்கு அதிகாரம் அளிப்பது அதைக் குறிக்கும் வழி. ஆனாலும் பாராளுமன்றம், மாநிலம் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளில் மட்டுமே அவர்களுக்கு இட ஒதுக்கீடு உள்ளது. எனவே, சட்டமன்றங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அவர்களுக்கு அதி



காரம் அளிக்க முயற்சிக்கிறோம்.

பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்கம் செய்து தர நினைத்த தலைவர் ராஜீவ் காந்தி ஆகும். இதற்காக அவர் பஞ்சாயத்து ராஜ் முறையை அறிமுகப்படுத்தினார். ஐயா, இந்த அரசு ஜம்முவில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி பேசுகிறது. காஷ்மீர் அங்கு OBC களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். இந்த அரசை நான் பாராட்டுகிறேன். அதற்காக இது மிகவும் சிறப்பான நடவடிக்கையாகும். ஆனால் பிரச்சினை பல நூற்றாண்டுக்கானவர்களுக்கு. பல ஆண்டுகளாக இந்த மக்கள் தாழ்த்தப்பட்டுள்ளனர், இப்போது கடந்த 75 ஆண்டுகளாக மட்டுமே தாழ்த்தப்பட்டோரை ஊக்குவிக்கும் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நாம் பின்பற்றுகிறோம்.

மக்கள் வாழ்க்கையில் வளர வேண்டும் என்னும் நோக்கத்தில் இட ஒதுக்கீடு கொள்கை கடந்த 75 ஆண்டுகளாக பின்பற்றி வருகிறோம். ஓ.பி.சி.க்கிளைப் பார்த்தால் அதில் இரண்டு மூன்று சமூகங்கள் மட்டுமல்ல. அந்த OBC வகைக்குள் நூற்றுக்கணக்கான சமூகங்கள் உள்ளன. சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாவிட்டால், இட ஒதுக்கீட்டின் விளைவுகள் மற்றும் எந்தெந்த சமூகங்கள் பயனடைந்துள்ளன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. இதில் வளர்ச்சி பெற்ற சில சமூகங்களும் உள்ளன.

அப்படி இல்லாத சமூகங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இதுவரை பலன் அடையாத சமுதாயத்தை வளர்க்க முடியும். நீங்கள் நினைவில் கொள்ள விரும்பினால், தமிழகம் தான் அதிக எண்ணிக்கையிலான இட ஒதுக்கீடு வழங்கிய மாநிலமாக உள்ளது. அங்கு 69 சதவீத இட ஒதுக்கீடு உள்ளது. விகிதாச்சார இட ஒதுக்கீடு அவசியம் என்று நினைக்கிறார்கள். முதலில் நாம் அதனை அடையாளம் காண வேண்டும். ஓபிசிக்களுக்கான இட ஒதுக்கீடு வேண்டும் என்று நினைக்கிறேன். OBC களுக்குள்ளேயே பல சமூகங்கள் வளர்ச்சி பெற்றனவாக உள்ளன.

இந்திய அரசு ஒரு கிரீமி லேயர் கான்செப்ட்டைப் கொண்டு உள்ளது என்று சொல்கிறார்கள். இதன்படி ஒரு தலைமுறையை சேர்ந்த ஒருவர் வளர்ந்து அல்லது பட்டம் பெற்றவர் என்றால் அவரது மகன் தகுதியற்றவர் என்று கூறப்படுகிறது. இந்த சமூகங்களை நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் அவர்களில் ஒரு குறிப்பிட்ட குடும்பம் இட ஒதுக்கீட்டின் பலன்களை பெற்றிருந்தால், இவை அந்த குடும்பத்தின் அடுத்த தலைமுறைக்கு சலுகைகள் வழங்கக் கூடாது என்று கூறப்படுகிறது. முதல் தலைமுறையில் இச்சலுகையை பெறுபவர்கள் கிரீமி லேயரில் இல்லாதவர்கள் என்று சொல்ல வேண்டும். அவர்களுக்கு முதலில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அந்த இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதற்கு அடுத்து அந்த மக்கள் கிரீமி லேயரில் இருந்து வந்தாலும், அதாவது, முதல் தலைமுறையில் சலுகை பெற்றிருந்தாலும் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஓபிசியினருக்கு அதிகாரம் அளிப்பது குறித்து அரசு பேசி வருகிறது. அவர்கள் உண்மையில் ஓபிசி பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் அதற்கு தகுதியானவர்கள் யார் என கண்டறிய சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும். 2019 ல், 370வது சட்டப்பிரிவு ரத்து செய்யப் பட்ட போது, நாங்கள் அதை எதிர்த்தோம்; ஜம்மு காஷ்மீர் தனியாக நடத்தப் பட வேண்டும் என்பதற்காக அல்ல. இந்தியா பல கலாச்சாரங்களை கொண்ட துணை கண்டம் என்று உணர்ந்ததால் அதனை எதிர்த்தோம். மேலும் அது போன்று எங்களுக்கு சொந்த கலாச்சார அடையாளங்கள் உள்ளன. நாம் அனைவரும் நம் தேசத்தின் ஒரு பகுதியை சார்ந்தவர்கள். முதலில் நாம் தமிழர், அடுத்து இந்தியர்கள் என்று உணர்கிறோம்.

ஆனால் தமிழகத்திற்குள் வந்தால், மதுரையை சேர்ந்த தமிழன் என்று சொல்வார்கள். வாழ்ந்து வரும் இடத்தின் அடையாளம் மதிக்கப்பட வேண்டும். சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதை நாங்கள் எதிர்க்கும் போது, அதைத் தான் சொல்கிறோம். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும், அது உ.பி.யாக இருந்தாலும், தமிழகமாக இருந்தாலும், கேரளாவாக இருந்தாலும் நமது மாநிலங்களை வழிநடத்த நமக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். நாங்கள் விரும்புவது ஒரே தேசம் என்ற ஒரே கருத்தை நாம் கொண்டிருக்க முடியும் என்று நீங்கள் கூற முடியாது.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் அந்தக் கருத்தை பின்பற்ற வேண்டும். முதலில் நீங்கள் ஜம்முவுக்கு மாநில அந்தஸ்தை திருப்பிக் கொடுங்கள் என்று சொல்லி முடிக்க விரும்புகிறேன். காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்குங்கள். அதன்பிறகு, இதைப்பற்றி அங்குள்ள மக்கள் முடிவு செய்யட்டும். இந்திய நாட்டுக்காக நீங்கள் செய்ய வேண்டியது சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு தான். ஒரு மாநில அரசு அதைச் செய்தால், அது ஒரு கணக்கெடுப்பு என்று மட்டுமே அழைக்கப்படுகிறது பீகாரில் செய்யப்பட்டது. ஒரு கணக்கெடுப்பு என்று மட்டுமே அழைக்கப்படுகிறது அது அதிகாரப்பூர்வமாக இருக்காது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. எனவே, ஜாதி வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு, இந்த அரசின் நிகழ்ச்சி நிரலில் உள்ளதா, இல்லையா என்பதை இந்த அரசிடம் கேட்க விரும்புகிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி பேசினார்.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சிவாஜி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 10.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் தூத்துக்குடி மாநகரம், சண்முகபுரம் பகுதி

# 28 மற்றும் 39வது வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், தூத்துக்குடி மாநகரம், சண்முகபுரம் பகுதிக்குட்பட்ட;

28வது வட்டச் செயலாளராகப் பணியாற்றி வரும் கே.அந்தோணிலாசர் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு. **மா.கருப்பசாமி** (40-டி, ராஜமன்னார் தெரு, தூத்துக்குடி-2) அவர்கள் 28வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

திரு. **எஸ். சக்திவேல்** (1-எச், மேலூர் பத்திரகாளியம்மன் கோவில் தெரு, தூத்துக்குடி-2) அவர்கள் 39வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 10.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---



திருப்புவனத்தில் மேற்கு ஒன்றிய, பேரூர் திமுக செயற்குழுக் கூட்டம் அவைத்தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் வசந்திசேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தீர்மானங்களை மாவட்ட கழக துணைச் செயலாளர். திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் வாசித்தார். இக்கூட்டத்தில் நகரச் செயலாளர் நாகூர்கனி.பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். ஒன்றியக் கழக நிர்வாகிகள். ஈஸ்வரன். வெங்கடேசன்.அக்கினி ராஜ். ரவி. சக்திமுருகன். ராமு. மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கண்ணன். வேல்பாண்டி.ராமலட்சுமி பாலகிருஷ்ணன். மகளிர் அணி சித்ரா மற்றும் கிளைக் கழக வட்டக் கழக பாக முகவர்கள் கலந்து கொண்டார்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு பேரூராட்சி, ஆத்துப்பட்டியில் குடகனாற்றின் குறுக்கே ரூ.7.28 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணிக்கு 09.02.2024 அன்று அடிக்கல் நாட்டினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, தாடிக்கொம்பு பேரூராட்சி தலைவர் திருமதி கவிதா சின்னத்தம்பி, உதவி இயக்குனர் (பேரூராட்சிகள்) திருமதி மனோரஞ்சிதம் உட்பட பலர் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.5.31 கோடி மதிப்பில் வட்டாட்சியர் அலுவலக புதிய கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார் . உடன் திருவில்லிபுத்தூர் நகர் மன்ற தலைவர் தங்கம் ரவிக்கண்ணன், யூனியன் சேர்மன் மல்லி ஆறுமுகம் ஆகியோர் இருந்தனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# 14,968 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.73.37 கோடியில் நலத்திட்ட உதவி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

விழுப்புரம், பிப். 11-

விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரியில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்டஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, டாக்டர் லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்புவிருந்தினராக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசியதாவது:-

தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் பெண்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு பல்வேறுசிறப்பு திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் வாழ்வாதாரம் பாதுகாப்பினை உறுதிசெய்துள்ளார்.

அதனடிப்படையில் விழுப்புரம் மாவட்டத்தில் ஊரகபகுதியில் 818 மகளிர் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த 11,711 பயனாளிகளுக்கு ரூ.64.26 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், நகர்ப்புற பகுதிகளில் 240 மகளிர் சுய உதவிக்குழுவை சேர்ந்த 3,163 பயனாளிகளுக்கு ரூ.8.31 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளும், வாழ்ந்துகாட்டுவோம் திட்டத்தில் 70 மகளிர் சுயஉதவிக்குழுவைச் சேர்ந்த 91 பயனாளிகளுக்கு ரூ.70 லட்சத்தில் அரசு நலத்திட்டஉதவிகளும், மகளிர் சுய உதவிகுழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்திட நடமாடும் மின் வாகனம் 3 பயனாளிகளுக்கு ரூ.9.60 லட்சம் என மொத்தம் 1,134 சுய உதவிக்குழுவைச் சேர்ந்த 14,968 பயனாளிகளுக்கு ரூ.73.37 கோடிமதிப்பீட்டில் அரசுநலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டம் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நிலவும்மாவட்டமாகும். எனவே மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மகளிர்கள் பயன்பெறும்வகையில் பல்வேறு சுய உதவிக் குழுக்கள்ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2023-2024ம் ஆண்டில் 9,308 மகளிர்சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.1,030 கோடி மதிப்பீட்டில் வங்கி கடனுதவிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் 1989ம் ஆண்டு மகளிர் சுயஉதவிக்குழுவினை உருவாக்கினார். அதன் பின்னர் இன்றைய முதலமைச்சர், துணை முதலமைச்சராக இருந்த போது மகளிர் சுய உதவிக் குழுவினர் பயன்பெறும் வகையில் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் மற்றும் வங்கிக்கடனுதவிகளை வழங்கி மகளிர் சுய உதவிக் குழுவினை பலப்படுத்தினார். இதன் மூலம் அதிகளவிலான மகளிர்கள் பயனடைந்து தங்கள் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழுதலைவர் ஜெயச்சந்த்திரன், துணைத் தலைவர் ஷீலா தேவி சேரன், கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய்நாராயணன் மகளிர் திட்ட இயக்குனர் காஞ்சனா, மாவட்டம் முன்னோடி வங்கி மேலாளர் ராஜேஸ்வரன், வாழ்ந்து காட்டுவோம் செயல் அலுவலர் தினகரன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### வெளிப்புற சக்திகளிடமிருந்து மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காக்க

# ஒன்றிய அரசு முன்வர வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, பிப். 11-

மீனவர்களை அங்கீகரித்து, அவர்களது வாழ்விடத்தையும், வாழ்வாதாரத்தையும் வெளிப்புற சக்திகளிடமிருந்து காக்க ஒன்றிய அரசு முன்வர வேண்டும் என 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-



தினகரன்
பிப்ரவரி 10, 2024 சனிக்கிழமை
முற்றுப்புள்ளி எப்போது?

தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படை தாக்கினாலும், கொலை செய்தாலும், படகுகளை சேதப்படுத்தினாலும், கைது செய்தாலும் ஒன்றிய அரசு, அதனை தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. இயற்கை பேரழிவில் அதிகம் பாதிக்கப்படுவதும் மீனவர்கள்தான். ஆனால் இவர்களது வாழ்வாதாரத்தை காக்க ஒன்றிய அரசு தவறிவிடுகிறது. ஒக்கிபுயலின்போது, கன்னியாகுமரி மீனவர்களை காக்க ஒன்றிய பா.ஜ. அரசு நடவடிக்கை எடுக்காதது மீனவர்களிடையே கடும் கொந்தளிப்பை உண்டாக்கியது. தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல், மீன்பிடி வலைகள் அறுப்பு, மீனவர்கள் சிறைபிடிப்பு, கண்டித்து மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை என்ற தலைப்பு செய்திகள் வெளிவராத நாட்களே இல்லை.

இலங்கை கடற்படையினரால் கடந்த 2 ஆண்டுகளில் 504 தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் கடலுக்கு செல்வது குறைந்தது. இதனால், இலங்கை கடற்படையினரின் சிறைபிடிப்பு நடவடிக்கை குறைந்திருந்தது. ஆனால் 2022ம் ஆண்டில் 36 தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர், 264 மீனவர்களை கைது செய்தனர்.

2023ம் ஆண்டில், இலங்கை கடற்படையினர் 243 தமிழக மீனவர்களை கைது செய்தனர். 37 படகுகளை பறிமுதல் செய்தனர். கடந்த 28 நாட்களில், 6 சம்பவங்களில், 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். 12 மீன்பிடி படகுகள் சிறை பிடிக்கப்பட்டன. இப்படி அடிக்கடி, தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்திடவும், உரிய தூதரக வழிமுறைகளை பின்பற்றி விரைவான, தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அதில், இலங்கை வசம் தற்போதுள்ள 77 மீனவர்கள் மற்றும் அவர்களது 151 படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும். 03.01.2024 அன்று பாகிஸ்தான் அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், 05 .12.2023 அன்று குவைத் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட 4 தமிழக மீனவர் களையும் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். மீன்பிடி தொழிலை மட்டுமே நம்பிவாழுகிற மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பது நமது முதன்மையான கடமை.

அதேவேளை, இது - இரு நாட்டு பிரச்சினை என்பதால், தீர்வுகாண வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசின் கையில் உள்ளது. சர்வதேச அளவில் நான்காவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உயர்ந்துள்ளது என ஒன்றிய அரசு மார்தட்டுகிறது. ஆனால், நம் மீனவர்கள் அந்நிய நாட்டு சிறையில் வாடுவதை எப்படி ஏற்றுக் கொள்வது?. ஒரே தேசம், ஒரே மக்கள் என்று கோஷமிடும் ஒன்றிய அரசு தமிழர்கள்தானே என எப்போதும் போல இருந்துவிடாமல் மீனவர்கள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பது நல்லது.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்காளம் என பெரும்பாலான மீனவர்கள் வாழும் நீண்ட கடற்கரை மாநிலங்களில், பா.ஜ.வுக்குச் சொல்லும் அளவிற்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. அதனால், ஒன்றிய அரசு, மீனவர்கள் விவகாரத்தில் பாராமுகமாக இருக்கிறது என்ற குற்றச் சாட்டும் நிலவுகிறது. மீனவர்கள் கடல்சார் பழங்குடிகள். அவர்களை அங்கீகரித்து, அவர்களது வாழ்விடத்தையும், வாழ்வாதாரத்தையும் வெளிப்புற சக்திகளிடமிருந்து காக்க, ஒன்றிய அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்!

## தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பஷீர்அகமது அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, பிப்ரவரி 9 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு பெ.கனகதுரை அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக,**

**திரு. பெ. கனகதுரை,**
எண். 11-6-23, அல்லா பிச்சை தெரு,
வத்தலக்குண்டு, நிலக்கோட்டை தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம் - 624 202. **அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10.02.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழ்லே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

## (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024 பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| " பிப்ரவரி -18 காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி 21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டம், கோ.புதூர் பகுதிக் கழகச் செயலாளர் அ. கிருஷ்டி ஜீவன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10.02.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று இடங்களில் தலா ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கடைகளை பரமக்குடி சட்ட மன்ற உறுப்பினர் செ. முருகேசன், ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகரச் செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் ஜீவரத்தினம், துணைத் தலைவர் குணா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் கிட்டு, மாலிக்,அக்பர் ஷர்மிளா, தேவிகா,பிரபா சாலமன்,ராதா பூசத்துரை, மாரியம்மாள் மும்மூர்த்தி கிருஷ்ணவேணி பழனிகுமார்,மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சர்மிளா, மகளிர் மாவட்ட தொண்டரணி வலைதள பொறுப்பாளர் செல்வி,மற்றும் ஒப்பந்தக்காரர் லண்டன் ரமேஷ் மற்றும் சண்முகம் மற்றும் நகர் பொருளாளர் ஜானகி ராமன், கலீல் ரகுமான்,உட்பட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# செம்மொழிப் பூங்காவில் மலர்க் கண்காட்சி ! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கண்டு மகிழ்ந்தார் !



சென்னை, செம்மொழிப் பூங்காவில், நேற்று (10.02.2024) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மலர்க் கண்காட்சியை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர்நலத் துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை விற்பனைத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர், ஜி.பிரகாஷ், வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு சிறப்பு செயலாளர் முனைவர் பொ.சங்கர், வேளாண்மைத்துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சி தலைமை செய்தி ஆசிரியர் ப. திருமாவேலன் எழுதிய 'வைக்கம் வீரரும் ஜெயமோகன் கயமையும்' நூல் வெளியீட்டு அறிமுக விழா காஞ்சிபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நூலினை அமைச்சர் எ.வ.வேலு வெளியிட அமைச்சர் தங்கம் தென்னரசு அதன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். விழாவுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், பதிப்பாளர் கருப்பு பிரதி நீலகண்டன், எழுத்தாளர் பி.என்.எஸ்.பாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

## செம்மொழிப் பூங்காவில் மலர் கண்காட்சி !

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார் !

சென்னை, பிப்.11–

சென்னை செம்மொழிப் பூங்காவில் மலர்க் கண்காட்சி ஒரு வாரம் நடைபெறுகிறது. மலர்க் கண்காட்சியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். குளிர் பிரதேசங்களில் நடத்தப்படும் மலர் கண்காட்சியை சென்னையில் நடத்தினால் எப்படி இருக்கும் என்ற சென்னை மக்களின் ஏக்கத்தைப் போக்கும் வகையில் தமிழ்நாடு தோட்டக்கலைத்துறை சார்பில் சென்னை செம்மொழிப் பூங்காவில் இந்த மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு, ஜூன் மாதம் மலர் கண்காட்சி நடத்தப்பட்டது. இதற்கு பெருமளவில் வரவேற்பு கிடைத்தது. இந்நிலையில், சென்னை செம்மொழிப் பூங்காவில் மலர் கண்காட்சி நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த மலர் கண்காட்சியை, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். விழாவுக்கு, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர் எழிலன், துணை மேயர் எம்.மகேஷ்குமார், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் குமாரவேல் பாண்டியன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் அபூர்வா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி, கொடைக்கானல், குமரி, மதுரையில் இருந்து அரிய வகை மலர்கள் எடுத்துவரப்பட்டு கண்காட்சியில் பயன்படுத்தப்படுகிறது. 10 லட்சம் மலர்கள் இந்த கண்காட்சியில் பயன் படுத்தப்படுகிறது. மலர் கண்காட்சி நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.150, குழந்தைகளுக்கு ரூ. 75 நிர்ணயம் செய்யப்படுகிறது.







# கலைஞரும் நானும்

57

■ ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்.



**“நான் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவன். அந்த வகையில், எனக்கு ஒரு தந்தையாக, கழகக் குடும்பம் என்பதால் தலைவராக, ஆட்சிப் பணியில் இருந்ததால் முதலமைச்சராக என எல்லாமுமாக எனக்கு நம்பிக்கை அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவருடன் 20 ஆண்டுகள் பயணம் செய்த வகையில், அவர் இல்லாத இந்த நாட்கள் எனக்குச் சோர்வைத் தருகின்றன” என்கிறார், கலைஞரின் தனிச் செயலாளராகப் பணியாற்றிய ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ்.**

## “கலெக்டரா இருந்தது போதும்யா!”



“காலையில் எழுந்ததும் முதல் அழைப்பு அவரிடமிருந்துதான் வரும். ஏதாவது ஒரு பத்திரிகைச் செய்தியைக் கூறி, அது தொடர்பான விளக்கத்தைக் கேட்பார். அதற்குரிய தகவல்களை உடனே போனில் சொல்லவில்லை என்றால், காலையில் சந்தித்ததும் முதல் கேள்வியாக அதுதான் இருக்கும்.

அது அரசு குறித்த விமர்சனமாக இருந்தால் உடனே, உரிய பதில் அளிக்க வேண்டும் என வேகம் காட்டுவார். அவரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க வேண்டுமே என்கிற எண்ணம்தான், அவருடன் பயணிப்பவர்களுக்கு இருக்கும். அந்த வகையில், கலைஞரின் வேகத்துக்குப் பின்னால்தான் நான் ஓடியிருக்கிறேன் என்பதே இந்த நாட்களில் என் மகிழ்ச்சித் தருணங்களாக நான் நினைத்துக் கொள்வேன்.

### கலைஞர் தேதி

திராவிட இயக்கப் பின்புலம் கொண்ட குடும்பம் என்பதால், கலைஞரின் பெயரை நான் சிறுவயதில் இருந்தே அறிவேன். 1961-ஆம் ஆண்டு வாக்கில் எரகுடி உயர்நிலைப் பள்ளியில் மாணவர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோது, ஆண்டு விழா நிகழ்ச்சியை கலைஞர் தலைமையில் நடத்த வேண்டும் என அன்பில் தர்மலிங்கம் அவர்களைச் சந்தித்தோம். அவரும் கலைஞர் திருச்சி வரும் தேதியைக் குறிப்பிட்டு, நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளச் சொன்னார்.

அந்த நிகழ்ச்சியில்தான் முதல்முறையாக கலைஞரைப் பார்த்து, பேசி மகிழ்ந்தேன். எனது கல்லூரிக் காலத்தில், இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாக இருந்தன. அதில் நானும் ஈடுபட்டிருக்கிறேன். 1966-ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் கலைஞர் பங்கேற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டுக்கு நான் தலைமை வகித்தேன். இப்படி கழகத்துடனும் கலைஞருடனும் எனது தொடக்கக் காலத் தொடர்புகள் இருந்தன.

### தனிச் செயலாளர்

அதன் பின்னர், நான் அரசுப் பணியில் சேர்ந்ததும் கலைஞருடன் நெருக்கம் உருவாகத் தொடங்கியது. 1969-ஆம் ஆண்டில் மக்கள் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். அதையடுத்து கலைஞரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. எனது தமிழார்வம், குடும்பப் பின்னணி எல்லாம் அறிந்தவர் என்பதால், என்னிடம் தனிப்பட்ட அக்கறை காட்டுவார்.

1989-ஆம் ஆண்டில், கலைஞர் மூன்றாவது முறையாக முதலமைச்சரானதும், அவரது தனிச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பு அளித்தார். திறமையானவர்கள் எங்கிருந்தாலும், அவர்களை அடையாளம் கண்டு பொருத்தமாகப் பணி அளிப்பதும் ஊக்குவிப்பதும் கலைஞரின் இயல்பு. அந்தப் பணியில், 1991-ஆம் ஆண்டு வரை அவருடன் இருந்தேன்.

1996-ஆம் ஆண்டில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியராக இருந்தபோது, முதலமைச்சராக நான்காவது முறை பொறுப்பேற்றிருந்த கலைஞர், திருக்கழுக்குன்றம் நிகழ்ச்சி ஒன்றுக்கு வருகை தந்தார். “மாவட்ட ஆட்சியராக இருந்தது போதும்யா”எனக் கூறி, அன்று மாலையே அவரது தனிச் செயலாளராக நியமித்து ஆணையிட்டார்.

**“எந்த இடத்திலும் தமிழ்நாட்டின் நலனை விட்டுக் கொடுத்து நான் பார்த்ததேயில்லை. பெரியார், அண்ணா, திராவிட இயக்கத்தின் நீட்சியாகத்தான் ஆட்சி அதிகாரத்தைப் பார்த்தார்.”**

2001-ஆம் ஆண்டுவரை அவரிடம் இருந்தேன். 2005-ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதும், அவருடனேயே இருக்கச் சொல்லிவிட்டார். அவரது இறுதிக் காலம் வரை, அவரது எண்ண ஓட்டத்தை, சிந்தனையை, செயல்படுத்தும் முனைப்புகளை உடனிருந்து கவனிக்கும் வாய்ப்பு அமைந்தது. நான் அறிந்தவரையில், உலக வரலாற்றில் கலைஞரைப் போல செயலூக்கம் கொண்ட தலைவராக யாரையும் பார்க்க முடியவில்லை.

### கருத்து அறிதல்

சமூகநலத்துறையில் ஒவ்வொரு புதிய திட்டம் அறிவிக்கப்படும்போது, அது மக்கள் மத்தியில் எப்படிச் செயல்படுத்தப் படுகிறது என அறிந்து கொள்ள விரும்புவார். ‘நீ என்ன நினைக்கிறே? வெளியில என்ன பேசிக்கிறாங்க?’ எனக் கருத்துகளைக் கேட்டுக் கொள்வார்.

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்’, ‘பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்’ போன்ற திட்டங்களின் போது அவரே கைப்பட, அமைச்சரவைத் தீர்மானங்களை எழுதினார். அவருக்கு முதுகுத் தண்டுவடத்தில் அறுவை சிகிச்சை செய்து ஓய்வில் இருந்த நேரத்தில்தான் அருந்ததியர் உள் ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டது.

அந்த நேரத்துக்கு மருத்துவமனையிலிருந்து நேராக சட்டமன்றம் வந்து அவையில் கலந்துகொண்டார். சமூகநீதிக் கொள்கையில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை அந்த நேரங்களில் உடனிருந்து நான் பார்த்திருக்கிறேன்.

இந்த வேலைக்கு இவ்வளவு நேரம்தான் எனக் கணக்கு வைத்திருப்பார். அரசு உத்தரவுகளைக் கொண்டு சேர்ப்பதிலும், அந்தக் கணக்கு உண்டு. எந்த வேலையும், அந்தக் குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் தேங்கக்கூடாது என நினைப்பார். அவரின் வேகம் அறிந்து அதற்கேற்ப தயாராக இருப்போம். அப்படியும் அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது.

### தமிழ்நாடு தமிழ்நாடு…

தமிழ்நாட்டைத் தாண்டி அவர் எங்கும் சென்று அதிக நாட்கள் தங்கியதில்லை. ஒன்றியத்தில் வி.பி. சிங் ஆட்சி அமைத்தபோது, டெல்லியில் பத்து நாட்கள் தங்கினார். அப்போதும் அவர் கேட்கும் கேள்வி என்பது “எப்பய்யா நம்ம ஊருக்கு போவோம்?” என்பதாகத்தான் இருக்கும். அந்த ஆட்சி அமைவதற்குக் காரணமாக இருந்தவர் கலைஞர்.

அரசுப் பயணமாக டெல்லி செல்கையில், அல்லது அலுவல் ரீதியாக ஆங்கிலத்தில் உரையாட வேண்டி இருந்தால், அவர் சொல்வதை விரிவாக என்னைப் பேசச் சொல்வார். எந்த இடத்திலும் தமிழ்நாட்டின் நலனை விட்டுக் கொடுத்து நான் பார்த்ததேயில்லை. பெரியார், அண்ணா, திராவிட இயக்கத்தின் நீட்சியாகத்தான் ஆட்சி அதிகாரத்தைப் பார்த்தார்.

### கலை ரசிகர்

அவர் இலக்கியவாதி, திரைத்துறை ஆளுமை என்றாலும், பிறர் சொல்லக் கேட்பதை ரசிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

நான் சினிமா ரசிகன். எந்தப் புதுப்படம் வந்தாலும் பார்த்துவிடுவேன். ஒருவகையில் நான் கடைப்பிடித்த நல்ல பழக்கங்களில் அதுவும் ஒன்று. ஏனென்றால், அந்தப் படம் குறித்து, கலைஞரிடம் பேச முடியும். சில நேரங்களில் ‘அந்தப் படத்தைப் பத்திச் சொல்லுய்யா’ எனக் கேட்பார்.

நான் ஒருமுறை லண்டன் சுற்றுப்பயணம் சென்றபோது, அங்கு ஷேக்ஸ்பியரின் இல்லத்துக்கும் சென்று வந்தேன். அங்கு பார்த்தது என்ன? என்கிற விவரங்களை ஆர்வமுடன் கேட்டுக் கொண்டார்.

எங்கு போனாலும், எந்த நேரத்திலும் அவர் சட்டைப் பையில் பேனா இருக்கும். பேனா இரவல் வாங்கியதே இல்லை. மற்றவர்களிடம் பேனா வாங்கி, ஒரு கையெழுத்துப் போட்டார் எனச் சொல்லவே முடியாது. இப்படி ஒவ்வொன்றிலும் நுணுக்கமாக அவருடன் 20 ஆண்டுகள் பயணித்ததைப் பெரும் வாய்ப்பாக நினைக்கிறேன்.

அவரின் இறுதிக் காலம் வரை அவரது செயலாளராகப் பணியாற்றிய எனக்கு, அவர் இல்லாத இந்தக் காலத்தைக் கடப்பது வருத்தமாகத்தான் உள்ளது. ஆயினும் இப்போதும், அவரது செயலாளராகவே என்னை நான் நினைத்துக் கொண்டு நாட்களைக் கடக்கிறேன். அந்த நினைவுகளே நிறைவை அளிக்கின்றன…!”

…பகிர்வார்கள்

## ஒன்றிய அரசின் அடாவடித்தனம்!

தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு தாய்ப் பல்கலைக்கழகமாம் சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப் பட்டு, 167 ஆண்டுகள் முடியப் போகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் நீண்ட நெடிய பயணத்தில் உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், ஆய்வாளர்கள், பல லட்சக் கணக்கான பட்டதாரிகள் அடக்கம்.

அத்தகைய பெருமைமிகு பல்கலைக் கழகத்தை ஒரு தனியார் நிறுவனம் போல வரையறுத்து, வருமான வரி கட்டச் சொல்லியும், ஜி.எஸ்.டி. கட்டச் சொல்லியும் ஒன்றிய அரசின் நிறுவனங்களால் தாக்கீதுகள் அனுப்பப்படுவது, கல்வியாளர்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஆளுநரே தொடர அனுமதித்துக் கொண்டே, வருமான வரி கட்டச் சொல்வது மிகப்பெரிய நகைமுரண். அதன் உச்சமாக இப்போது வங்கிக் கணக்கை முடக்கியிருப்பதும் ஒன்றிய அரசின் அடாவடித்தனம் எனக் குற்றம்சாட்டும் கல்வியாளர்கள், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் இதுபோல வருமான வரி விதிக்கப்படுகிறதா என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர்.

மோடி ஆட்சியின் முதல் 9 ஆண்டுகளில் மட்டும் பொதுத்துறை வங்கிகள் 10.41 லட்சம் கோடி ரூபாய் வாராக்கடனைத் தள்ளுபடி செய்திருக்கின்றன. பெரு நிறுவனங்களின் மீது காட்டும் கரிசனத்தில், ஏழை-எளிய மக்களின் கல்விக்கும் கொஞ்சம் காட்டலாம். அதிலும் குறிப்பாக, புகழ்பெற்ற சென்னைப் பல்கலையின் பெருமையைச் சிதைக்கும் செயல் ஏற்புடையது அல்ல.

## :ப்ளாஷ்பேக்



### மாலையில் மாலை!

1973-ஆம் ஆண்டு நான் சென்னை சட்டக் கல்லூரியில் மாணவர் அமைப்பின் செயலாளராக இருந்தபோது அன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். சென்னை சட்டக் கல்லூரியில் மாலைநேர நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று மாணவர்களிடையே உரையாற்றினார். அப்போது நான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாலை அணிவித்தேன். அருகில் சட்டக் கல்லூரி முதல்வர். இன்றைக்கு என்னுடைய 70-வது வயதில் இதை எல்லாம் நினைத்துப் பெருமை அடைகிறேன்.



சிங்காரவேலு

**–ஆர்.சிங்காரவேலு, மாவட்டத் தலைவர், நாகை மாவட்ட வழக்கறிஞர் அணி**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.


அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பிரிவினை அல்ல! சுயநிர்ணய உரிமை!

**1962-இல் மாநிலங்களவை உறுப்பினரான அண்ணா, அவையில் பேசிய முதல் உரை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை. “நான் திராவிட இன வழி வந்தவன், நாங்கள் விழைவது அனைத்தும் சுய நிர்ணய உரிமையே. நாங்கள் கோரக் கூடிய தனித்திருத்தல் பிரிவினை அல்ல” என்று ஒவ்வொரு வார்த்தையையும் மிக அழுத்தமாகப் பயன்படுத்தினார் அண்ணா. இப்போது மாநில உரிமையை, பிரிவினை என்பவர்களுக்கும் அப்போதே பதில் சொல்லி விட்டார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 385




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.